பாலவிஜயா

தொகுதி: 2 பகுதி: 11

நவம்பர் 1931

3L
[illegible]
[illegible]
188788

1374
Regd. No. M. 25



# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ்மீ கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால் உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா போஸ்டேஜ் வில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாக செலவாகிறது. சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ 20 அரைப் பக்கம் ரூ 11

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

பாலவித்யா ஆபீஸ்,

நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்

உ

# பாலவித்யா

(மாதப் பத்திரிகை)

[stamp] ஆவணக் காப்பக ... சென்னை-600 008
188788

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்"

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

| தொகுதி | 1931ஆ நவம்பர்மீ | பகுதி |
|---|---|---|
| II | பிரஜோத்பத்திஆ கார்த்திகைமீ | ~~IX~~ XI |

## "விகடத்துணுக்குகள்"

("புனிதன்" புகல்வது.)

**உபாத்தியாயர்** :—ஏண்டா, ராஸ்கல்! நான் வாக்கியத்தின் முதலில் பெரிய எழுத்துப் போடவேண்டுமென்று சொன்னேனே, ஏன் இப்படிப் போட்டாய்? இப்பொழுது போடு பார்க்கலாம்.

**பையன்** :—பெரிய எழுத்தா ஸார்! போடவேண்டும்? (என்று கூறிக் கொண்டே ஸிலேட் முழுவதும் ஒரே எழுத்தாக எழுதிவிட்டு) ஸார்! இப்படியா போடவேண்டும்? (என்றான்).

**உபாத்தியாயர்** :—சீ கழுதை! இப்படியா எழுதச் சொன்னேன்?

**பையன்** :—அப்படியானால் தங்கள் வயிறு அத்தனை எழுதினால் போதுமா ஸார்?

* * *

மனைவி:—[illegible] இன்றைக்கு ஒரு மாதிரியாயிருக்கிறீர்?

கணவன்:—உன்[illegible]தான்.

மனைவி:—நான் [illegible]ய்ததென்ன?

கணவன்:—[illegible]ன்றும் செய்யவில்லை. கர்ப்பவதியாய் இருக்கிறாயே.

மனைவி:—இருந்தால் உங்களுக்கென்ன?

கணவன்:—ஒன்றுமில்லை. ஆண்பிள்ளை பிறந்தால் என் வேலைக்கு உதவியாயிருப்பான். ஆகையால் 'ஆண்பிள்ளை பிறக்குமா' என்று யோசனை செய்கிறேன்.

மனைவி:—எனக்கு பெண்பிள்ளை பிறந்தால்தான் உதவி. எனக்குப் பெண்தான் வேண்டும்.

கணவன்:—சரி. அப்படியானால் இருவருக்கும் பொதுவாகப் பிறக்கும்படி கடவுளை வேண்டுவோம்.

* * * *

தன் மகனுக்கு சிறிதும் படிப்பு வரவில்லை என்று பிச்சண்ணா தன் பிள்ளையைத் திட்டுகிறார்.

தந்தை:—சீ முட்டாள்! உனக்கு ஒரு எழுத்துக்கூட தெரியவில்லையே.

தனயன்:—ஏன் தெரியவில்லை? என்னுடைய கண்கள் நன்றாகத் தானே இருக்கின்றன.

* * * *

நான் ஒரு புத்தகம் தயாரித்தேன். அப் புத்தகம் வேண்டாதவர்கள் 5½ அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—நான் இருக்குமிடம் எதுவோ அதே.



"அம்மா! எனக்கு அந்த அய்யரைக் கண்டால் பிடிக்கவில்லை. இன்னும், அவருடைய சிநேகிதர் ஒருவர் வந்திருக்கிறாராம். அவர் சும்மா வராமல் ஒரு நாயையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். அதைக் கட்டிவைக்காமல் இரவு முழுமையும் தோட்டத்தில் விட்டுவிடுகிறார்கள். அதைப் பார்த்தாலே எனக்கு பயமாயிருக்கிறது." என்று கூறவே, செல்லம்மாள், வியப்புற்று, கொஞ்சநேரம் அக் கிழவனுடைய முகத்தை உற்றுநோக்கிவிட்டு, "இவனுக்கு அவர்மீது ஏன் இவ்வளவு கோபம்? இருக்கட்டும்." என்று ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவள்போல், அக் கிழவனை நோக்கி,

"முருகா! உனக்கு ஏன் இப்படி திடீரென்று ஜுரம் வந்தது?" என்று வினவினாள். அவள் இக் கேள்வியைக் கேட்டதும், அக் கிழவன், திடுக்கிட்டவனாய், மிரண்ட பார்வையுடன், அம் மங்கையைக் கூர்ந்து கவனித்தவண்ணம், தழதழத்த குரலில்,

"அம்மா! அதற்குக் காரணம் எனக்குத் தெரியாது." என்றான்.

செல்லம்மாள்:—இதை நான் நம்பமாட்டேன். முருகா! உன் மனதிலிருப்பதை என்னிடம் சொல்ல உனக்கென்ன பயம்?

முருகன்:—அம்மா! எனக்கு பயமில்லை. ஆனால் காரணம் ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே.

செல்லம்மாள்:—காரணமில்லாமல் இப்படி ஜுரம் வரமுடியாது. ஆமாம்; நீ எதையாவது பார்த்து பயந்து கொண்டாயா? முருகா! இங்கே பார். அவர் மாடியிலிருந்து விழுந்ததுமுதற்கொண்டு உனக்கும் உடம்பு சரியாயில்லை. அவர் விழுந்ததை நீ பார்த்துக்கொண்டிருந்தாயோ?

முருகன் மறுபடியும் திடுக்கிட்டான். வக்கீல் அனந்தராமய்யருடைய மூத்த பிள்ளை அதே மாடிப்படிகளில் விழு

ந்து இறந்தானென்றும், தன் புருஷனை அதே முருகன் ஓடிவந்து அழைத்துச் சென்றானென்றும், கமலாம்பாள் சொன்னதுமுதற்கொண்டு, செல்லம்மாள், முருகனுக்கும் ராமு அவ்விதம் விழுந்து இறந்தது தெரிந்திருக்குமென்றும், ஆகவே, கிருஷ்ணமூர்த்தியும் அதேவிதம் விழுந்துவிட்டதாக நினைத்து, அதனால் அந்த பழய ஞாபகம் வர, அந்த அதிர்ச்சியினால் அக் கிழவனுக்கு ஜுரம் வந்திருக்கக்கூடுமென்று எதிர்பார்த்தவளாய், முருகனுக்கு ராமு அவ்விதம் விழுந்து இறந்தது தெரியுமாவென்றும், அப்படித் தெரிந்திருந்தால், அதைப்பற்றி அவன் சொல்லக்கூடிய விபரத்தையும் கேட்டறிய நிச்சயித்தாள். நிற்க, கிருஷ்ணமூர்த்தி விழுந்ததை அவன் பார்த்துக்கொண்டிருந்தானா என்று அம்மங்கை கேட்டதும், அக் கிழவன்,

“அம்மா! அவர் விழுந்ததை நான் பார்க்கவில்லை. ஆனால் அவர் விழும்பொழுது உண்டான தடதடவென்ற சப்தத்தை நான் கேட்டேன்.” என்று கூறிவிட்டு தான் சொல்வதை அப் பெண்மணி நம்புகிறாளா அல்லது இல்லையா என்று தெரிந்துகொள்ள கவலைப்படுபவன்போல் காணப்பட்டான். செல்லம்மாள்,

“அவர் மாடியிலிருந்து விழுந்தாரென்று எனக்குத் தோன்றவில்லை. அவர் அப்படியே விழுந்திருந்தபோதிலும் நீ பயந்துகொள்ளக் காரணம் இல்லை. சரி; இதற்குமுன் யாராவது அவ்விதம் மாடியிலிருந்து விழுந்ததை நீ பார்த்திருக்கிறாயோ?” என்று வினவவே, முருகன், வியப்புற்று, மறுபடியும் ஒருதரம் அவளை உற்றுநோக்கினான். பிறகு,

“அம்மா! உள்ளதைச் சொல்லிவிடுகிறேன். என் எஜமானருடைய முதல் பிள்ளை அதே மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்தார். அவருடைய சரீரத்திலிருந்த ஒவ்வொரு எலும்பும் ஒடிந்து அவர் சாகும்வரையில் பட்ட கஷ்டத்தை நான் என் கண்ணால் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆகவே, இந்த ஐயாவும் அன்று விழுந்ததும் எனக்கு அந்த ஐயாவின் ஞாபகம் வந்துவிட்டது. அம்மா! இதுவரையில்



இந்த ஊரில் எல்லோரும் அவர் வேறுவிதமாக இறந்ததாகவே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர் விழுந்து இறந்ததை ஏன் இரஹஸ்யமாக வைத்துக்கொள்ள என் எஜமானர் பிரயத்தனப்பட்டாரென்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் காரணமில்லாமல் அப்படிச் செய்திருக்கமாட்டார். ஆகையால் நீங்கள் தயவுசெய்து இதை உங்கள் மனதிலேயே வைத்துக்கொள்ளவேண்டும்.” என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவே, செல்லம்மாள்,

“முருகா! அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். நீயும் இதை வேறு ஒருவரிடமும் சொல்லாதே. சரி; அந்தம்மாள் உனக்கு வேளாவேளையில் சாப்பாடு போடுகிறாளா?” என்று வினவினாள். அக் கிழவன்,

“போடுகிறாள். அந்தம்மாள் மிகவும் நல்லவள்போலிருக்கிறது.” என்று கூறவே, அம் மங்கை,

“சரி; நேரமாய்விட்டது. நான் போய்விட்டு மறுபடியும் நாளைக்கு வருகிறேன். நீ அனாவசியமாய் உன் உடம்பை மேலும் கெடுத்துக்கொள்ளாதே. நானே தினந்தோறும் உனக்கு மருந்து கொண்டுவந்து கொடுக்கிறேன். சீக்கிரம் சௌக்யமாய்விடும்.” என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டு போய்விட்டாள்.

## அத்தியாயம் 8.

அதே இரவு சுமார் 9 மணிக்கு, டாக்டர் குஞ்சிதபாதம் சாப்பிட்டுவிட்டு தன் தங்கையுடன் பேசிக்கொண்டிருக்கையில், ஒருவன், அவ் வீட்டிற்குள் ஓடிவந்து, டாக்டரைப் பார்த்ததும்,

“ஆலங்குடி சுந்தரப்பய்யருக்கு ஜுரம் அதிகமாய்விட்டது. உங்களை உடனே அழைத்துக்கொண்டு வரச் சொன்னார்கள். வண்டி கொண்டுவந்திருக்கிறேன்.” என்று கூறவே, குஞ்சிதபாதம், எழுந்து அவசரத்துடன் உடுத்திக்கொண்டு, ஒரு கைப் பெட்டியுடன் வெளியே சென்றார்.

ஆலங்குடி குற்றாலத்திலிருந்து கிட்டத்தட்ட மூன்று மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய கிராமம். குஞ்சிதபாதம் சுந்தரப்பையருக்கு செய்யவேண்டிய சிகித்சைகளைச் செய்துவிட்டு அவருடைய வீட்டிலிருந்து கிளம்பும்பொழுது சுமார் 11 மணி இருக்கும். அவர் வந்த வண்டி பாதிதூரம் வந்ததும், எதிர் திசையிலிருந்து பல சுமைவண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்துகொண்டிருந்ததாலும், அந்த ரோடில் இரு வண்டிகள் ஒன்றின் பக்கத்தில் மற்றொன்றாய்ப் போகமுடியாததாலும், குஞ்சிதபாதம் வந்த வண்டி ரோடு கொஞ்சம் அகலம் அதிகமாயிருந்த ஓர் இடத்தில் நிறுத்தப்பட்டது. அச்சமயம் நல்ல நிலவும் காற்றும் இருந்ததால், குஞ்சிதபாதம் வண்டியைவிட்டு கீழே இறங்கி, பக்கத்திலிருந்த ஒரு வயலில் மேலும் கீழும் உலாவவாரம்பித்தார். அவர் உலாவிக்கொண்டிருந்த இடத்திலிருந்து சுமார் 20 கஜ தூரத்தில் இருவர் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவனுடைய குரலைக் கேட்டதும் டாக்டர் குஞ்சிதபாதம், வியப்புற்று,

“யாரது? மிஸ்டர் முத்துஸ்வாமியா?” என்று வினவ, அம் மற்றொருவன்,

“ஆமாம். யாரது? டாக்டர்வாளா? அடடா; ஏது இப்படி இவ்வளவுதூரம் இந்த வேளையில் வந்தீர்கள்?” என்று வினவியவாறு, எழுந்து, குஞ்சிதபாதத்தை நோக்கி வந்தான். அவனுடனிருந்தவனும் வரவே, டாக்டர் அவனைக் கவனித்துப் பார்த்துவிட்டு, “ஓஹோ! நீங்களா?” என்றார். அது சாரங்கபாணியேயொழிய வேறல்ல.

பிறகு மூவரும் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தனர். அதன் முடிவில் வண்டிக்காரன் வந்து வண்டி போகலாமென்று கூறவே, குஞ்சிதபாதம் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சென்று மறுபடியும் வண்டியில் ஏறிக்கொண்டார். உடனே அது வேகமாய்ப் புறப்பட்டது. கடைசியில் வண்டி வக்கீல் அனந்தராமய்யருடைய பங்களா முருக விலாஸின் சமீபம் வந்தபொழுது, அதன் தோட்டத்



திற்குள் ஒரு நாய் ஓயாமல் குலைக்கும் சப்தம் கேட்கவே, குஞ்சிதபாதம் வண்டியில் உட்கார்ந்தபடியே வெளியில் எட்டிப்பார்த்தார். மறுவினாடி ஒருவன், அத் தோட்டத்திற்குள்ளிருந்து வெளிக்கிளம்பி, பாய்ந்தோடி, பக்கத்திலிருந்த ஒரு தோப்பிற்குள் மறையவே, குஞ்சிதபாதம், திகைப்புற்று, அவசரத்துடன் வண்டியிலிருந்து கீழே குதித்தார். இதற்குள் நாம் சொன்ன அக் கோம்பை நாய் மேலும் பயங்கரமாய்க் குலைத்தவண்ணம் வெளியே ஓடிவந்து அவரைக் கண்டதும் அவரை நோக்கிப் பாயவே, அவர், மனம் பதற, மறுபடியும் வண்டிக்குள் தாவி யுட்கார்ந்துகொண்டார். மறுநிமிஷம், அத் தோட்டத்திற்குள்ளிருந்து ஒருவன் சிட்டியடிக்கும் சப்தம் வரவே, அந்த நாய், தன் வாலைக் குழைத்துக்கொண்டு, மறுபடியும் உள்ளே ஓடிற்று. சற்று நேரத்திற்கெல்லாம், அவ்விதம் சிட்டியடித்தவன், வெளியே வந்து,

“யார் அங்கே?” என்று கம்பீர த்வனியில் வினவ, குஞ்சிதபாதம், அவனை உற்றுநோக்கியவண்ணம், மேலும் வியப்புற்று,

“மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி!” என்று அழைக்கவே, கிருஷ்ணமூர்த்தி மெல்ல நடந்துவந்து அவ் வண்டியின் சமீபத்தில் நின்றான். உடனே டாக்டர் குஞ்சிதபாதம்,

“என்ன இது? உங்களை நான் படுக்கையிலிருந்து எழுந்திருக்கக்கூடாதென்று சொன்னேனே. நீங்கள் இப்படி இவ் வேளையில் அலைந்துகொண்டிருக்கிறீர்களே.” என்றார். வண்டியில் இருந்தது டாக்டர் குஞ்சிதபாதம் என்று அறிந்ததும் கிருஷ்ணமூர்த்தி திடுக்கிட்டான். ஆனால் மறுவினாடி, வியக்கத்தக்க அமைதியுடன்,

“சதா படுத்துக்கொண்டிருப்பது மிகவும் சிரமமாயிருந்தது. இன்னும், இன்று தலையில் வலி அவ்வளவு இல்லை. தோட்டத்தில் நாய் ஓயாமல் குலைத்துக்கொண்டிருந்ததால், யாரோ அன்னியன் ஒருவன் அதற்குள் நுழைந்திருக்க வேண்டுமென்று நினைத்து, அது யாரென்று பார்க்கும்

பொருட்டு வெளியே வந்தேன். இனிமேல் உங்களுடைய அனுமதியில்லாமல் நான் என் படுக்கையைவிட்டு எழுந்திருக்கமாட்டேன்." என்று கூறவே, குஞ்சிதபாதம்,

"உங்களுடைய தோட்டத்திற்குள் அந்நியன் நுழைந்தது வாஸ்தவமே. ஒருவன் அதிலிருந்து வெளியே ஓடிவருவதை நான் பார்த்தேன்." என்றார்.

கிருஷ்ணமூர்த்தி, இதைக் கேட்டதும், மறுபடியும் திடுக்கிட்டவன்போல், அடக்க இயலாத ஆவலுடன்,

"அவனை நீங்கள் நன்றாய்ப் பார்த்தீர்களோ? அவன் யார்?" என்று கேட்க, குஞ்சிதபாதம்,

"அது எனக்குத் தெரியாது. நான் அவனுடைய முகத்தைப் பார்க்கமுடியவில்லை. மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி! இந்த ஸ்திதியில் நீங்கள் எழுந்து வெளியே வந்திருப்பதிலிருந்து நீங்கள் அபாயத்தையோ அல்லது உங்களுடைய விரோதி ஒருவனையோ எதிர்பார்த்தீரென்பது நிச்சயம். ஆகவே நீர் இதை உடனே போலீஸாருக்குத் தெரிவிக்கவேண்டும்." என்றார். ஆனால் கிருஷ்ணமூர்த்தி, கெஞ்சிய குரலில்,

"டாக்டர்வாள்! இதைப் போலீஸாருக்குத் தெரிவிப்பதில் எனக்கு இஷ்டமில்லை. நீங்களும் தயவுசெய்து இதை உங்களுடைய மனதிலேயே வைத்துக்கொள்ளவேண்டும்." என்று கேட்டுக்கொள்ளவே, குஞ்சிதபாதத்துக்கு உண்டான ஆச்சர்யத்திற்கு அளவில்லை. அவர், மறுபடியும் வண்டியைவிட்டு கீழே இறங்கி, அதை அனுப்பிவிட்டு, அவ்வாலிபனை நோக்கி, தாழ்ந்த குரலில்,

"ஐயா! நீர் இவ்வளவு பெரிய பங்களாவை வாடகைக்கு எடுத்துக்கொண்ட விஷயத்தை அறிந்ததுமே எனக்கு ஆச்சர்யமாயிருந்தது. பிறகு நீர் கீழே விழுந்த செய்தி தெரிவிக்கப்பட்டு, நான் வந்து உம்மைக் கேட்டபொழுது, மாடிப் படிகளில் தவறி விழுந்துவிட்டதாக நீரும் சொன்னீர். நீர் மாடியிலிருந்து விழவில்லையென்பது எனக்கு நன்றாய்த்



தெரியும். இன்னும், நான் வரும்பொழுதும், அந்நியர்கள் உம்முடைய பக்கத்திலிருக்கும்பொழுதும், நீர் மனோவஸ்தைப்படுபவர்போல் பாசாங்கு செய்கிறீர். ஆகவே, உம்முடைய நடவடிக்கையினால், என்னுடைய சந்தேகமும் ஆச்சர்யமும் அதிகரித்தன. இப்பொழுது இவ் விஷயத்தை போலீஸாருக்குத் தெரிவிப்பதில் உமக்கு இஷ்டமில்லை என்று சொல்கிறீர். மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி! நீர் காரணமில்லாமல் இவ்வூருக்கு வரவில்லை. ஒரு முக்கியமான கார்யத்தை உத்தேசித்து நீர் வந்திருக்கிறீரென்பது நிச்சயம். ஆனால் சட்டத்திற்கு விரோதமான எக் கார்யத்தையும் செய்யும் எண்ணத்துடன் நீர் வரவில்லையென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆகவே, உம்முடைய கார்யத்தில் நான் எவ்விதத்திலாவது உதவி செய்யக்கூடுமானால் நான் தயார். நீர் என்னை நம்பலாம்." என்றார். இதைக் கேட்டதும், கிருஷ்ணமூர்த்தி உடனே விடையளிக்காமல் கொஞ்சநேரம் மௌனமாயிருந்தான். பிறகு குஞ்சிதபாதத்தின் கரங்களை அன்புடன் பற்றிக்கொண்டு, மரியாதையுடன்,

"டாக்டர்வாள்! இனி நான் உள்ளதை ஒளிப்பதில் பிரயோஜனமில்லை. நான் மிகவும் முக்கியமான ஒரு கார்யத்தை உத்தேசித்துத்தான் இங்கு வந்திருக்கிறேன். ஆனால் அக்கார்யத்தில் நான் போலீஸாருடைய உதவியை எதிர்பார்க்க வழியில்லாமலிருக்கிறது. இப்பொழுது நீங்கள் பேசியதிலிருந்து நான் உங்களை நம்பலாமென்று எனக்குத் தோன்றுவதாலும், இன்னும் உங்களைப்போன்ற ஒருவருடைய உதவி எனக்கு மிகவும் அவசியமாயிருப்பதாலும் நான் எதற்காக இங்கு வந்திருக்கிறேனென்பதை உங்களிடம் சொல்லுகிறேன். ஆனால் இப்பொழுது அகாலமாய்விட்டதாலும், கொஞ்சநேரம் உலாவிவிட்டுவரும்பொருட்டு வெளியே போயிருக்கும் என் தோழன் முத்துஸ்வாமியும் அந்த சாரங்கபாணியும் சீக்கிரம் வந்துவிடுவார்களாகையாலும், நீங்கள் தயவுசெய்து நாளைக் காலை வரும்பொழுது நாம் இதைப்பற்றி சாவகாசமாய்ப் பேசுவோம்." என்று கூறவே, டாக்டர் குஞ்சிதபாதம்,

"சரி; அப்படியே செய்வோம். ஆமாம்; இந்த சாரங்கபாணி யார்?" என்று வினவினார். கிருஷ்ணமூர்த்தி,

"அவன் ஒரு சித்திரம் எழுதுபவனாம். இவ் வீட்டின் மாடியிலிருக்கும் சில பழய படங்களுக்கு மறுபடியும் வர்ணம் வைத்துக்கொண்டிருக்கிறான்.—" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், கொஞ்சதூரத்தில் முத்துஸ்வாமியும் சாரங்கபாணியும் வந்துகொண்டிருப்பதைப் பார்த்ததும், "அதோ அவர்கள் வந்துவிட்டார்கள். நான் இவ்விதம் இங்கு நின்றுகொண்டிருப்பதை அவர்கள் பார்க்கக்கூடாது. தயவு செய்து நீங்கள் காலமே வாருங்கள்." என்று கூறவே, டாக்டர் குஞ்சிதபாதம்,

"சரி; நீர் இந்த சாரங்கபாணியின் விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையாய் இரும்." என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அவர் கொஞ்சதூரம் சென்றதும், "தோட்டத்திலிருந்து வெளியே ஓடிவந்தவன் சாரங்கபாணியின் நண்பனாயிருக்கவேண்டும். கிருஷ்ணமூர்த்தியின் சிநேகிதன் முத்துஸ்வாமி அவ் வீட்டிலிருந்தால், தன் நண்பன் அவ் வீட்டிற்குள் நுழைவது ஆபத்திற்கிடமென்று நினைத்து, தந்திரமாய் அவனை இந்த சாரங்கபாணி வெளியில் அழைத்துக்கொண்டு போய்விட்டான். முருகனும் கிருஷ்ணமூர்த்தியும் எழுந்து நடமாட முடியாமல் இருக்கிறார்களென்றும், அந்த சமையற்காரி பெண்பிள்ளைதானென்றும் நினைத்து, அம் மூவரையும் சாரங்கபாணி சட்டைசெய்யவில்லை. ஆனால் அவன் இந்த கிருஷ்ணமூர்த்தியை ஏமாற்றுவது லேசான காரியமல்ல. ஆமாம்; கிருஷ்ணமூர்த்தி கூறிய முக்கியமான காரியம் என்ன? இந்த சாரங்கபாணி இவ்வளவு சாமர்த்தியமாய் தன் நண்பனை அவ் வீட்டிற்குள் அனுப்பி செய்யக்கூடியதென்ன?" என்று சிந்திக்கலானார்.

* * * *

மறுநாட் காலை சுமார் 7 மணி இருக்கும்.

அச்சமயம் குற்றாலத்தின் வடபாகத்தில் பக்கத்தில் வேறு வீடுகளின்றி தனிமையிலிருந்த ஒரு வீட்டில் சுமார்



25 வயதுள்ள ஒருவன் தன் படுக்கையில் சிறிதும் நிம்மதியின்றி அப்படியும் இப்படியும் புரண்டுகொண்டிருந்தான். அவனைத் தவிர அவ் வீட்டில் வேறு ஒருவரும் இருந்ததாகத் தோன்றவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம், அவ்வீட்டின் வாசற் கதவு தட்டப்படும் சப்தம் கேட்கவே, அவன் ஆவலுடன் எழுந்து ஓடி அதைத் திறந்ததும், வெளியில் நின்றுகொண்டிருந்த சாரங்கபாணி,

"சிங்காரவேலு! என்ன சமாசாரம்?" என்று வினவியவண்ணம் உள்ளே நுழைந்தான்.

சிங்காரவேலு, மறுபடியும் கதவைத் தாளிட்டுவிட்டு, உள்ளே வந்து, கோபத்துடன் சாரங்கபாணியை நோக்கி,

"நேற்று நான் கையும் களவுமாய் மாட்டிக்கொண்டிருப்பேன். ஏதோ ஆண்டவன் தயவினால் தப்பினேன். ஏண்டா! உனக்கு மூளையில்லையா? அவ் வீட்டுத் தோட்டத்தில் கோம்பை நாய் ஒன்று இருக்குமென்று நீ என்னிடம் சொல்லவேண்டாமோ?" என்று வினவினான்.

சாரங்கபாணி:—அடபாபமே! அவர்கள் அதைத் தோட்டத்தில் விட்டுவைப்பார்களென்று நான் எதிர்பார்க்கவில்லை. சரி; என்ன நடந்தது?

சிங்காரவேலு:—11½ மணி வரையில் நான் அத் தோட்டத்திற்குள் நுழைய முடியவில்லை. பிறகு நான் நுழைந்து அப்பூட்டைத் திறக்குமுன், அந்த நாய் ஓடிவந்து என் இடுப்பு வேஷ்டியைக் கவ்விக்கொண்டுவிட்டது. அப்படியில்லாமல் அது என் காலைக் கவ்வியிருந்தால் என் கதி அதோகதியாய்ப் போயிருக்கும். இதோ என் வேஷ்டியைப் பார். உன்னை நம்பி இனிமேல் நான் ஒன்றும் செய்யமாட்டேன். ஏண்டா! அந்த வீட்டில் இந்த மாயவரம் பாப்பானைத் தவிர (முத்துஸ்வாமியைத் தவிர) நாம் வேறு எவரைப்பற்றியும் கவலைப்படவேண்டியதில்லையென்று சொன்னாயே. அந்த நாய் குலைக்கவாரம்பித்ததும் ஒருவன் வெளியில் ஓடிவந்தானே.

சாரங்கபாணி :—(திகைப்புற்று) அது யார்?

சிங்காரவேலு :—அது யாரோ. அந்த இருட்டில் நான் அவனுடைய முகத்தைப் பார்க்கமுடியவில்லை. நல்லவேளையாய் அவனும் என்னைப் பார்க்கவில்லை. இது மட்டுமா? நான் வெளியில் ஓடிவரும்பொழுது அவ் வீட்டின் சமீபத்தில் இரட்டைமாட்டு வண்டி ஒன்று வந்துகொண்டிருந்தது. அப்பப்பா! நேற்று நடந்ததை நினைத்தால் எனக்கு இன்னும் உடம்பு நடுங்குகிறது. நாம் ரங்கூனில் அவ்வளவு பெரிய வேலையை எவ்வளவு சுலபமாய் செய்தோம். ஆமாம்; சபாபதி நம்முடைய கடிதங்களை இன்னும் கொடுக்கவில்லையே?

சாரங்கபாணி :—நீ ஒரு பைத்யம். அவைகளை அவன் இப்பொழுது கொடுப்பானோ? நாம் இந் நகைகளைக் களவாடி அவனிடம் கொடுத்தபிறகுதான் கொடுப்பான். அதுவும் சந்தேகம். சிங்காரவேலு! இப்படி தெரியாமல் அவனிடம் மாட்டிக்கொண்டுவிட்டோமே.

சிங்காரவேலு :—சரி; அதைப்பற்றி இப்பொழுது புலம்புவதில் என்ன லாபம்? மேலே ஆகவேண்டிய கார்யத்தைப் பார்.

சாரங்கபாணி :—நீ சொல்வது ஆச்சர்யமாயிருக்கிறதே. அந்த நாய் குலைத்ததும் அப்படி வெளியில் யார் ஓடிவந்திருக்கமுடியும்? அந்த ஐயர் (கிருஷ்ணமூர்த்தி) தன் தலையைத் திருப்பக்கூட முடியாமல் படுக்கையிலேயே எப்பொழுதும் கிடக்கிறார். அந்தக் கிழவன் (முருகன்) இப்பொழுது எழுந்திருந்தால் உடனே அவனுடைய பிராணன் போய்விடும். இவர்களைத் தவிர அவ் வீட்டில் வேறு ஆண்பிள்ளை ஏது? அந்தப் பாப்பானைத்தான் (முத்துஸ்வாமி) நான் இழுத்துக்கொண்டு போய்விட்டேன். அடாடா! இது இப்படி முடியுமென்று நான் நினைக்கவில்லையே.

சிங்காரவேலு :—அந்த நாயுடன் வந்தவன் என்னைப் பார்க்கவில்லையென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அவன் பார்த்திருந்தால்—



சாரங்கபாணி :—இருக்கட்டும். இதோ நான் அந்த பங்களாவுக்குப் போனதும், அவ்விதம் ஓடிவந்தது யாரென்பதையும், அவன் உன்னைப் பார்த்தானோவென்பதையும் கண்டுபிடித்துவிடுகிறேன்.

சிங்காரவேலு :—நீ என்னவேண்டுமானாலும் செய். அந்த நாய் அவ் வீட்டிலிருக்கும்வரையில் நாம் அதற்குள் நுழையமுடியாது.

சாரங்கபாணி :—அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். அந்தப் பாப்பான் (முத்துஸ்வாமி) அதை இன்று இழுத்துக்கொண்டு மாயவரம் போய்விடுவான். சரி; இன்று சபாபதி பிள்ளை என்னை மாயவரம் வரச் சொல்லியிருக்கிறான். போகலாமென்று இருக்கிறேன்.

சிங்காரவேலு :—நல்ல கார்யம். முடியுமானால் அவனையும் அழைத்துக்கொண்டுவா. ஏனென்றால் அவன் ஏற்கனவே பலதரம் அந்த பங்களாவிற்குள் போயிருப்பதாகச் சொன்னான். அவனும் ஒருதரம் இப்பொழுது அந்த மாடி ஹாலைப் பார்ப்பது நலம்.

சாரங்கபாணி :—வாஸ்தவம். ஆனால் அவன் வரமாட்டேன் என்கிறானே.

சிங்காரவேலு :—இப்பொழுது வருவதற்கு என்ன கேடு? அதான் அக் கிழவன் (முருகன்) நடமாட்டமில்லாமல் கிடக்கிறானே.

சாரங்கபாணி :—நீ சொல்வதும் சரிதான். சரி; நான் சென்று அந்த ஐயரைப் (கிருஷ்ணமூர்த்தியை) பார்த்துவிட்டு ரயிலுக்குப் போகிறேன். (என்று கூறிவிட்டு, எழுந்து வெளியே போய்விட்டான்.)

சற்றுநேரத்திற்கெல்லாம் சாரங்கபாணி கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தபொழுது, அவ் வாலிபன் "ஐயோ! அப்பா!" என்று அலறியவண்ணம், தன் வலியை சகிக்கமுடியாதவன்போலவும், தன் படுக்கையிலிருந்து எழுந்து உட்காரவும் சக்தியற்றவன்போலவும், காணப்பட்டான்

இதைக் கண்ட சாரங்கபாணி, அவ் வாலிபனுடைய பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அனுதாபமொழுகும் குரலில்,

“ஸ்வாமி! நீங்கள் படும் கஷ்டத்தைக் கண்டு என்னால் சகிக்கமுடியவில்லையே. இந்த டாக்டர் பிரயோஜனமில்லாவிட்டால் மாயவரத்திலிருந்தாவது ஒரு நல்ல டாக்டரை அழைத்துவந்து பார்க்கச் சொல்லலாமே” என்று கூறவே, கிருஷ்ணமூர்த்தி, பேசவும் சக்தியற்றவன்போல் பெருமூச்செறிந்தவண்ணம்,

“யார் வந்து என்னசெய்யமுடியும்? நான் பிழைப்பேனென்று எனக்குத் தோன்றவில்லை. ஐயோ! அப்பா! என்னால் தாங்கமுடியவில்லையே.” என்று கல்லும் கரையும் விதம் அலறினான். உடனே சாரங்கபாணி,

“ஸ்வாமி! நீங்கள் இப்படி அசட்டையாயிருப்பது சரியல்ல. வேண்டுமானால் நான் இந்த 8¾ மணி வண்டியில் மாயவரம் சென்று டாக்டர் ஷண்முகம் பிள்ளையை அழைத்துக்கொண்டு வரட்டுமா?” என்று வினவ, கிருஷ்ணமூர்த்தி,

“ஐயோ! சாரங்கபாணி! நான் என்ன செய்வேன்? ஷண்முகம் பிள்ளையும் தசமுகம் பிள்ளையும் என்னைக் காப்பாற்றமுடியாது. ஹே பரமேசுவரா! இவ்வூருக்கு வந்தால் என் பழய வியாதி போய்விடுமென்று வந்தேனே. ஐயோ! இப்படி முதலுக்கே மோசம் வந்துவிடுமென்று —” என்று மேலே பேசுமுன், சாரங்கபாணி,

“ஸ்வாமி! இதென்ன இப்படி அதைர்யப்படுகிறீர்கள்? அதெல்லாம் அப்படி ஒன்றும் வந்துவிடாது. ஆமாம்; உங்களுடைய நண்பர் (முத்துஸ்வாமி) இன்று மாயவரம் திரும்பிப் போவதாக நேற்று என்னிடம் சொன்னாரே. அவரையாவது இன்னும் சில நாட்கள் இங்கு இருக்கச் சொல்லுங்கள். அவரும் இல்லாமல் நீங்கள் தனிமையில் என்ன செய்வீர்கள்?” என்று வினவினான். கிருஷ்ணமூர்த்தி, விசனத்துடன்,

“ஐயோ! நான் எவ்வளவோ கெஞ்சிப்பார்த்தேனே பாபி, கேட்காமல் தனக்கு கார்யமிருக்கிறதென்று, ஏற்கனவே 6¼ மணி வண்டியில் போய்விட்டான். ஐயோ! அப்பா! அடியம்மா!” என்று மறுபடியும் அலறவாரம்பிக்கவே, சாரங்கபாணி, வியப்புற்று,



“ஏற்கனவே போய்விட்டாரா? நான் இப்பொழுது வரும்பொழுது அவருடைய நாய் தோட்டத்தில் இருந்ததே?” என்றான். கிருஷ்ணமூர்த்தி,

“அவர் மறுபடியும் அடுத்த வாரம் வரப்போகிறார். அப்பொழுது அதை அழைத்துக்கொண்டு போவார். அது ஒரு சனியன். நாள் முழுமையும் குலைத்துப் பிராணனை வாங்குகிறது.” என்று கூறவே, சாரங்கபாணி,

“அடாடா! அவருக்கு என்ன இவ்வளவு அவசரம்? நீங்கள் இந்த நிலைமையில் இருக்கும்பொழுது, அவர் இப்படிப் போகலாமா? நானாவது பக்கத்திலிருப்போமென்றால், திடீரென்று எனக்கும் இன்று கும்பகோணம் போகவேண்டியிருக்கிறதே.” என்றான். உடனே, கிருஷ்ணமூர்த்தி,

“நீர் கும்பகோணம் போகப் போகிறீரா? என்ன விசேஷம்?” என்று கேட்க, சாரங்கபாணி,

“கொஞ்சம் கார்யம் இருக்கிறது. சபாபதி பிள்ளை என்று என் நண்பர் ஒருவர் அவ்வூரில் இருக்கிறார். அவர் இந்த கிராமத்தில் தனக்கு கொஞ்சம் நிலம் வேண்டுமென்று என்னிடம் சொல்லியிருந்தார். அது சம்பந்தமாக நான் உடனே அவரைப் பார்க்கவேண்டியிருக்கிறது. அநேகமாய் அவரும் நாளைய தினம் என்னுடன் வருவார். சரி; இன்று நான் மாடியில் வேலை செய்யப்போவதில்லை (சாரங்கபாணி கிருஷ்ணமூர்த்தியை முதலில் கண்டு பேசிய மறுதினமே அவ் வீட்டின் மாடியில் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டான்.) நான் உத்தரவு வாங்கிக்கொள்ளட்டுமா?” என்று எழுந்து நின்றுகொண்டு, “ஸ்வாமி! உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்.” என்று கவலையுடன் கூறிவிட்டு, விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

மறு நிமிஷம் டாக்டர் குஞ்சிதபாதம் அவ்வறைக்குள் நுழைந்தார்.

---

## அத்தியாயம் 9.

டாக்டர் குஞ்சிதபாதத்தைப் பார்த்ததும், கிருஷ்ணமூர்த்தி புன்சிரிப்புடன் எழுந்துட்கார்ந்துகொண்டு சமீபத்திலிருந்த ஒரு சாய்வு நாற்காலியைக் காண்பித்து அதில் அவரை அமர்ந்துகொள்ளுமாறு உபசரிக்கவே, குஞ்சிதபாதம்,

"முதலில் என் கார்யத்தைப் பார்த்துவிடுகிறேன். பிறகு பேசுவோம்." என்று கூறிவிட்டு, கால்மணி நேரத்திற்குள் கிருஷ்ணமூர்த்தியின் மண்டையிலிருந்த ஒரு சிறு காயத்தைக் கழுவி, மருந்துவைத்துக் கட்டிமுடித்ததும், அவ் வாலிபனை நோக்கி,

"சரி; என்ன சமாசாரம்? சொல்லும்." என்றார். கிருஷ்ணமூர்த்தி, தன் சமையற்காரியை அழைத்து, அவ் வீட்டின் வாசற்கதவைத் தாளிடுமாறு உத்தரவிட்டுவிட்டுப் பிறகு திரும்பி, குஞ்சிதபாதத்தை நோக்கி,

"டாக்டர்வாள்! இந்த பங்களாவின் சொந்தக்காரராகிய வக்கீல் அனந்தராமய்யர், தான் இறக்குமுன், சில கடிதங்களை ஜகதீசய்யர் எனப் பெயர்கொண்ட தன் நண்பர் ஒருவரிடம் கொடுத்தார். சில தினங்களுக்குமுன் இக் கடிதங்கள் இந்த ஜகதீசய்யருடைய வீட்டிலிருந்து களவு போய்விட்டன. இக் கடிதங்களைப் பிறர் வாசிக்கும்பக்ஷத்தில் இந்த அனந்தராமய்யருடைய குடும்ப ஸம்பந்தமான ஒரு இரஹஸ்யம் வெளியாய்விடும். நான் இந்த ஜகதீசய்யருடைய நண்பர் ஒருவரின் தமக்கை பிள்ளை. சென்னையில் லா காலேஜில் வாசித்துக்கொண்டிருக்கிறேன். எனக்கு இத் துப்பறியும் கார்யத்தில் கொஞ்சம் பைத்தியமும் சாமர்த்தியமும் உண்டென்பது என் மாமனுக்குத் தெரியுமாகையால், அவர் இத் திருட்டைப்பற்றி எனக்கு எழுதவே, இதைக் கண்டுபிடிக்க நான் ஒப்புக்கொண்டேன். அக் கடிதங்களைத் திருடியவர்கள் சீக்கிரம் இவ் வீட்டிற்கும் வருவார்களென்று நான் எதிர்பார்த்ததால், ஒரு அந்நியனைப் போல் நான் இவ் வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு



இங்கு வந்தேன். இது என் மாமனையும் ஜகதீசய்யரையும் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. ஆனால் அக் கடிதங்களில் அடங்கியிருக்கும் இரஹஸ்யம் என்னவென்பதையாவது, நான் அவ்விதம் அத் திருடர்கள் சீக்கிரம் இவ் வீட்டிற்கும் வருவார்களென்று எதிர்பார்ப்பதற்குக் காரணமென்னவென்பதையாவது, நான் சொல்லவேண்டியது அநாவசியம். டாக்டர்வாள்! இதுதான் விஷயம். இன்னும் நான் மாடிப் படிகளிலிருந்து விழவில்லையென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். நான் படுக்கையைவிட்டும் எழுந்திருக்க முடியாமல் மரணவஸ்தைப்படுபவன்போல் பாசாங்கு செய்வதற்குக் காரணம், நான் அப்படிச் செய்தால் அத் திருடர்கள். என்னைப்பற்றிய கவலையும் பயமும் சிறிதுமின்றி, இங்கு தாராளமாய் வருவார்கள் என்பதே." என்று கூறவே, டாக்டர் குஞ்சிதபாதம், வியப்புற்று, கொஞ்ச நேரம் மௌனமாயிருந்துவிட்டு, பிறகு,

"சரி; மாடிப்படியிலிருந்து விழவில்லையென்று நீரே ஒப்புக்கொள்ளுகிறீர். அப்படியானல் அன்று வாஸ்தவத்தில் என்ன நடந்தது?" என்று வினவினார். கிருஷ்ணமூர்த்தி,

"அது எனக்கே தெரியாது. அன்று நான் மாடிக்குப் போய்விட்டு, மறுபடியும் கீழே வந்து, கடைசி மாடிப் படியின் சமீபத்தில் நின்றுகொண்டிருக்கையில், ஒருவன் எங்கிருந்தோ ஒரு கல்லால் ஓங்கி என் மண்டையில் அடித்தான். அடிபட்டதும் நான் மூர்ச்சித்து விழுந்துவிட்டேன். பிறகு நான் மறுபடியும் சுயநினைவுடன் என் கண்களைத் திறந்து பார்த்தபொழுது, பக்கத்தில் நின்றுகொண்டிருந்த முருகன் நான் மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டதாகக் கூறினன். இதைக் கேட்டதும் நான் உள்ளதைச் சொல்லாமலிருப்பதே உசிதமென்று நினைத்து, நீங்கள் கேட்டபொழுது நானும் அப்படியே சொன்னேன்." என்றான். குஞ்சிதபாதம்,

"ஆனல் அவ்விதம் உம்மை அடித்தது யாரென்பது உமக்குத் தெரியாதோ?" என்று வினவ, அவ் வாலிபன்,

"தெரியாது. ஆமாம்; நேற்று இரவு நீங்கள் போகும்பொழுது நான் இந்த சாரங்கபாணியின் விஷயத்தில் மிக

வும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று சொன்னீர்களே. நீங்கள் அவனை சந்தேகிக்கக் காரணமென்ன?'' என்று கேட்கவே, குஞ்சிதபாதம், செல்லம்மாள் தன்னிடம் சொன்னதை, விபரமாய்க் கூறினார். இதைக் கேட்டதும் கிருஷ்ணமூர்த்தி, வியப்புற்று, டாக்டரை ஒருதரம் உற்று நோக்கிவிட்டு, பிறகு, புன்சிரிப்புடன்,

"டாக்டர்வாள்! உங்களுடைய தங்கை இவ்விதம் எனக்கு உதவிபுரிவாளென்று நான் நினைக்கவில்லை. சரி தான்; சாரங்கபாணி, பகலில் இவ் வீட்டிற்குள் ஒன்றும் செய்யமுடியாதென்று நினைத்து, இரவில் தானோ அல்லது தன் நண்பனோ இவ் வீட்டிற்குள் நுழையும்பொருட்டு, அப் பூட்டுக்கு மறுசாவி தயார் செய்திருக்கிறான். எனக்கு ஆதியிலிருந்தே இந்த சாரங்கபாணியின்மீது சந்தேகமுண்டு'' என்றான்.

பிறகு இருவரும் மேலும் அரை மணிநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்முடிவில் டாக்டர் குஞ்சிதபாதம், கிருஷ்ணமூர்த்தியிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, போய்விட்டார்.

அவர் சென்றதும், கிருஷ்ணமூர்த்தி, எழுந்து நின்றுகொண்டு, மூக்கில் விரலைவைத்தவண்ணம், தன் வாயைவிட்டு "ஆஹா! இந்தக் குட்டி (செல்லம்மாள்) மகா புத்திசாலிபோலிருக்கிறதே. என்ன ஆச்சர்யம்? நான் மாடியிலிருந்து கீழே விழவில்லையென்பதை இவள் கண்டுபிடித்துவிட்டாளே. இருக்கட்டும்; இவளைப்பற்றி நன்றாய் விசாரிக்கவேண்டும்.'' என்று கூறிவிட்டு சிறித்துக்கொண்டே மேலும் கீழும் உலாவவாரம்பித்தான்.

## அத்தியாயம் 10.

மறுநாட் காலை சுமார் 8 மணி இருக்கும்.

அச்சமயம் முருகவிலாஸில் கிருஷ்ணமூர்த்தியும் டாக்டர் குஞ்சிதபாதமும் பேசிக்கொண்டிருந்தனர். அதில் கிருஷ்ணமூர்த்தி, டாக்டரின் தங்கை செல்லம்மாளைப்பற்றி,



மிகவும் புகழ்ந்து பேசவே, குஞ்சிதபாதம், தன்னுள் "சரிதான்; இவன் என் தங்கையின் புத்திசாலித்தனத்தையும் அழகையும் கண்டு மயங்கி அவளை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறானென்பது நிச்சயம். ஆனால் செல்லம்மாள் இஷ்டப்படும்பக்ஷத்தில் அவளை இவனுக்கு கொடுப்பது உசிதமே. இருக்கட்டும்.'' என்று சிந்தித்தவராய், கிருஷ்ணமூர்த்தியை நோக்கி,

"ஏன் ஸார்! நீங்கள் என்ன பிரகசர்ணமா அல்லது அஷ்டஸகஸ்ரமா?'' என்று விசாரிக்க, அவ் வாலிபன்,

"நான் அஷ்டஸகஸ்ரம். நீங்கள்?'' என்று வினவினான். உடனே குஞ்சிதபாதம், சிறித்துக்கொண்டே,

"பேஷ்! ஸ்வஜாதியார்? நானும் அஷ்டஸகஸ்ரம்தான்.'' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், தோட்டத்தில் நாய் குலைக்கும் சப்தம் கேட்கவே, கிருஷ்ணமூர்த்தி, பரபரப்புடன்,

"டாக்டர்வாள்! தயவுசெய்து அது யாரென்று பாருங்கள்.'' என்று கூறவே, ஜன்னலின் சமீபத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த குஞ்சிதபாதம், தன் நாற்காலியிருந்து தாவி எழுந்து, வெளியில் எட்டிப் பார்த்துவிட்டு,

"சாரங்கபாணி யாரோ இருவரை அழைத்துக்கொண்டு வருகிறான்.'' என்றார். இதைக் கேட்டதும், கிருஷ்ணமூர்த்தி,

"ஸ்வாமி! வாசற் கதவு தாளிடப்பட்டிருக்கிறதோ?'' என்று வினவ, குஞ்சிதபாதம்,

"நான் வரும்பொழுது தாளிட்டுவிட்டுத்தான் வந்தேன். பிறகு அதை ஒருவரும் திறக்க நியாயமில்லை.'' என்றார். உடனே கிருஷ்ணமூர்த்தி, தன் தலையணையின் கீழிருந்த சாவிக்கொத்து ஒன்றை கையில் எடுத்துக்கொண்டு,

"அப்படியானால் தயவுசெய்து என்னுடன் வாருங்கள்.'' என்று கூறியவண்ணம் வெளியே ஓடினான். குஞ்சிதபாதமும் வியப்புற்று அவனைப் பின்பற்றிச் சென்றார்.

கிருஷ்ணமூர்த்தி, வாசற் கதவு தாளிடப்பட்டிருந்ததைத் நிச்சயித்துக்கொண்டு, மாடிக்கு ஓடி, அதன் ஹாலின் கதவை தன்னிடமிருந்த சாவிகளில் ஒன்றால் திறந்துகொண்டு, உள்ளே பாய்ந்து அந்த ஹாலின் இடதுகைப்பக்கத்திலிருந்த ஒரு சிறிய அறையை மற்றொரு சாவியினால் திறந்தவண்ணம், டாக்டர் குஞ்சிதபாதத்தை நோக்கி அவசரத்துடன்,

"டாக்டர்வாள்! அவர்கள் இப்பொழுது கண்டிப்பாய் மாடிக்கு வருவார்கள். நீங்கள் தயவுசெய்து, இவ்வறைக்குள் ஒளிந்துகொண்டிருந்து, அவர்கள் செய்வதையும் பேசுவதையும் கவனித்து என்னிடம் சொல்லவேண்டும். நீங்கள் பயப்படவேண்டாம். அவர்கள் இவ்வறைக்கு வரமாட்டார்கள். வேண்டுமானால் நீங்கள் அதை உட்பக்கம் தாளிட்டுக்கொள்ளுங்கள்." என்று கூறவே, குஞ்சிதபாதம், சிறித்துக்கொண்டே,

"நான் அவ்வளவு பயந்தாங்குள்ளி அல்ல. நீர் கவலைபடவேண்டாம்." என்று கூறியவண்ணம் அவ்வறைக்குள் சென்றார். உடனே கிருஷ்ணமூர்த்தி, அதை மறுபடியும் வெளிப்பக்கம் பூட்டிவிட்டு, வெளியே சென்று, ஹாலையும் பூட்டிக்கொண்டு கீழே ஓடினான். இதற்குள் வாசற் கதவு தடதடவென்று தட்டப்பட்டது. அச் சப்தத்தைக் கேட்டதும், கிருஷ்ணமூர்த்தியின் சமையற்கார அம்மாள், பின்கட்டிலிருந்து ஓடிவரவே, அவ் வாலிபன், அவளைக் கதவைத் திறக்குமாறு உத்தரவிட்டுவிட்டு, தன் அறைக்கு ஓடி, அவசரத்துடன் தன் படுக்கையில் விழுந்து, அதில் கிடந்த ஒரு பெரிய சால்வையினால் தன் சரீரம் முழுமையும் நன்றாய்ப் போர்த்திக்கொண்டு,

"ஐயோ! அப்பா! என்னால் தாங்கமுடியவில்லையே." என்று அலரவாரம்பித்தான்.

மறு நிமிஷம், சாரங்கபாணியும் சபாபதி பிள்ளையும் (சிங்காரவேலுவை வெளியில் நிறுத்திவிட்டு) அவ்வறைக்குள் நுழைந்தனர். சாரங்கபாணி, கிருஷ்ணமூர்த்தியைப்



பார்த்ததும், மரியாதையுடன் தன் கரங்களைக் கூப்பியவண்ணம்,

"ஸ்வாமிகளே! இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று விசாரிக்க, அவ் வாலிபன், பேசமுடியாதவன்போல் ஒருதரம் பெருமூச்செரிந்துவிட்டு,

"யார்? சாரங்கபாணியா? அதை ஏன் கேட்கிறீர்? ஐயோ! நான் ஒருவழியாய் செத்தாலும் தேவலையே. என் மண்டை வலி மணிக்கு மணி அதிகமாகிறதே. ஐயோ! அப்பா! நான் என்ன செய்வேன்?" என்று மேலும் உரத்த குரலில் அலறினான். பிறகு மெல்லத் தன் தலையைத் திருப்பி, சாரங்கபாணியுடன் நின்றுகொண்டிருந்த சபாபதி பிள்ளையை ஒருதரம் உற்றுநோக்கினான். உடனே அவனுடைய முகம் கொஞ்சம் மாறியது. அதைக் கவனிக்காத சாரங்கபாணி,

"இவர்தான் நான் சொன்ன சபாபதி பிள்ளை. இவருக்கும் நல்ல படங்கள் என்றால் கொஞ்சம் பைத்தியமுண்டு. ஆகவே, நான் இம் மாடியில் சில நல்ல படங்கள் இருப்பதாகச் சொன்னதும், அவைகளைத் தானும் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டதால், அழைத்துக்கொண்டு வந்தேன்." என்றான். உடனே சபாபதி பிள்ளையும் அவ் வாலிபனுடன் மரியாதையுடனும் பிரியத்துடனும் பேசவாரம்பித்தான். இவ்விதம் மேலும் கால் மணி நேரம் கழிந்தது. அதன் முடிவில் அவ்விருவரும் மாடிக்குப் போவதாகச் சொல்லிவிட்டு கிருஷ்ணமூர்த்தியிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வெளியே சென்றார்கள். வெளியே வந்ததும், சபாபதி பிள்ளை, சாரங்கபாணியை நோக்கி, தாழ்ந்த குரலில்,

"சாரங்கா! இந்த ஐயர் (கிருஷ்ணமூர்த்தி) பிழைப்பாரென்று எனக்குத் தோன்றவில்லை. இவரைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியது அனாவசியம்." என்றான்.

பிறகு மூவரும் மாடிக்குச் சென்றனர். சாரங்கபாணி அந்த ஹாலின் கதவைத் திறந்ததும், சபாபதி பிள்ளை, அவனை நோக்கி,

"சாரங்கா! நீ வெளியில் இரு. யாராவது வந்தால் சொல்." என்று கூறிவிட்டு, சிங்காரவேலுவை அழைத்துக்கொண்டு, அதற்குள் நுழைந்தான். உள்ளே நுழைந்தவன் ஒருதரம் அந்த ஹாலை நன்றாய்க் கவனித்துப் பார்த்தான். அந்த ஹாலில் நான்கு பெரிய பீரோக்களும், 6 அழகிய அலமாரிகளும் இருந்தன. கீழே தரையில் ஒரு பெரிய கிருஷ்ணபகவானுடைய படம் வைக்கப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் வர்ணங்களுடன் பல கிண்ணங்களும், இன்னும் வர்ணம் வைக்கத் தேவையான இதர சாமான்களும் இருந்தன.

பிறகு, சபாபதி பிள்ளை, நாம் கூறியதுபோல் அந்த ஹாலை ஒருதரம் கவனித்துவிட்டு,

"சிங்காரவேலு! அந் நகைகள் இருந்தால் இந்த பீரோக்களிலாவது அல்லது அலமாரிகளிலாவதுதான் இருக்கும். இவைகளுக்கு உன்னிடம் சாவிகள் இருக்கின்றனவா பார்." என்று கூறவே, சிங்காரவேலு ஒருதரம் அவைகளைக் கவனித்தான். பிறகு,

"இந்த பீரோக்களுக்கு ஒரே சாவிதான். ஆனால் அலமாரிகளுக்கு தனித்தனி சாவி இருக்கும்." என்று, நாம் கூறிய பீரோக்களில் ஒன்றை நோக்கிச் சென்று, தன் மடியிலிருந்து பெரிய சாவிக் கொத்து ஒன்றை எடுத்து, அதிலிருந்த பல சாவிகளில் ஒன்றை உபயோகித்து, அதைத் திறக்கவே, அது சிறிதும் கஷ்டமின்றி திறந்துகொண்டது. ஆனால் அவன் அதை உடனே மறுபடியும் பூட்டிவிட்டு, அதே சாவியை உபயோகித்து, மற்ற மூன்று பீரோக்களையும் திறந்துவிட்டான். பிறகு மேலும் 10 நிமிஷ நேரத்திற்குள், அந்த அலமாரிகளுக்கும் தன்னிடம் சாவிகள் இருந்ததை அவன் காண்பிக்கவே, சபாபதி பிள்ளை, சந்தோஷத்துடன்,

"சபாஷ்! சிங்காரவேலு! சரி; நாம் இப்பொழுது தேடுவது பிறகு. நாம் அதிக நேரம் இங்கு தாமதிப்பது சந்தேகத்திற்கிடம். ஆமாம்; நீ இவைகளைத் தேட எவ்வளவு நேரம் பிடிக்கும்?" என்று வினவினான், சிங்காரவேலு



"அதை இப்பொழுது நான் சொல்லமுடியாது. சில பீரோக்களில் பிறர் எளிதில் கண்டுபிடிக்கமுடியாமல் விலையுயர்ந்த சாமான்களை வைக்க இரகஸ்யமான இடங்கள் இருக்கும்." என்று விடையளித்தான். உடனே சபாபதி பிள்ளை, ஆவலுடன்,

"அப்படி இருந்தால் அவைகளை உன்னால் கண்டுபிடிக்கமுடியுமோ?" என்று வினவ, சிங்காரவேலு,

"முடியும். அதிருக்கட்டும்; நீ முதலில் அந்த நாயைத் தொலைக்க ஏற்பாடு செய். அது இருக்கும் வரையில் நான் இவ்வீட்டிற்குள் நுழைய முடியாது." என்றான். சபாபதி பிள்ளை,

"அதைத் தொலைப்பது ஒரு பெரிய காரியமல்ல. ஆனால் நாம் அதைக் கொல்வது சந்தேகத்திற்கிடம்; இருக்கட்டும். சரி; நீ முதலில் வெளியே போய்விடு. நானும் சாரங்கபாணியும் மறுபடியும் அந்த ஐயரைப் பார்த்துவிட்டு வருகிறோம்." என்று கூறவே, சிங்காரவேலு துரிதமாய்க் கீழே போய்விட்டான். உடனே சபாபதி பிள்ளையும், அந்த ஹாலைவிட்டு வெளியே சென்று, அங்கு நின்றுகொண்டிருந்த சாரங்கபாணியை நோக்கி,

"சாரங்கா! கதவைப்பூட்டிக்கொண்டு வா; போவோம்." என்றான்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவ்விருவரும், மறுபடியும் கிருஷ்ணமூர்த்தியிடம் சென்று, அவனுடன் பேச வாரம்பித்தார்கள். கடைசியில் சாரங்கபாணி,

"ஸ்வாமி! இன்று நான் மாடியில் வேலை செய்யப் போவதில்லை. சரி; நாங்கள் உத்திரவு வாங்கிக்கொள்ளுகிறோம்." என்று கூறியவண்ணம் எழுந்து நின்றான். உடனே சபாபதி பிள்ளையும், எழுந்து நின்றுகொண்டு,

"ஐயா! உடம்பை ஜாக்கிரதையாய்ப் பாத்துக்கொள்ளுங்கள்." என்றான். மறு நிமிஷம் இருவரும் வெளியே சென்றார்கள். அவர்களைக் கண்டதும் தோட்டத்தில் கட்

டப்பட்டிருந்த அக் கோம்பை நாய் மறுபடியும் கோபத்துடன் குலைக்கவாரம்பித்தது.

சபாபதி பிள்ளை, அந்த பங்களாவிற் கெதிரிலிருந்த தோட்டத்திற்கு வந்ததும், ஒரு தரம் நாலாபக்கங்களையும் கவனித்தான். பிறகு சுமார் 5 நிமிஷ நேரம் சிந்தனையுடன் நின்றுவிட்டு, திடீரென்று, தன் வாயைவிட்டு,

“சபாஷ்! இதுதான் நல்லயோசனை.” என்று கூறவே, சாரங்கபாணியும் சிங்காரவேலும், வியப்புற்று ஆவலுடன்,

“என்ன யோசனை?” என்று வினவினார்கள். ஆனால் சபாபதி பிள்ளை,

“அவசரப்படாதேயுங்கள். பிறகு சொல்லுகிறேன். சிங்காரவேலு! நீ இப்பொழுது என்னுடன் மாயவரம் வரவேண்டும். சரி; வாருங்கள். ரயிலுக்கு நாழியாய்விட்டது.” என்று கூறவே, எல்லோரும் துரிதமாய் நடக்கவாரம்பித்தார்கள். அவர்கள் அத் தோட்டத்தைக் கடந்து சென்று சாலைக்குள் நுழைந்ததும், சாரங்கபாணி, கெஞ்சிய குரலில்,

“சபாபதி! எங்களுடைய கடிதங்களை நீ எப்பொழுது—” என்று மேலே பேசுமுன், சபாபதி பிள்ளை,

“அவைகளைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். இந்த நகைகள் நம்மிடம் அகப்பட்டதும் அவைகளை நான் உங்களிடம் கொடுத்துவிடுகிறேன்.” என்றான்.

சற்று நேரத்திற்கெல்லாம், அம் மூவரும் டாக்டர் குஞ்சிதபாதத்தின் வீட்டின் சமீபம் வந்தபொழுது, அவ் வீட்டிலிருந்து செல்லம்மாளும், டாக்டர் குப்புஸ்வாமி அய்யருடைய சம்ஸாரம் கமலாம்பாளும், நதிக்குப் போகும் பொருட்டு, இடுப்பில் குடங்களுடன் வெளியில் வந்தார்கள். செல்லம்மாள் சாரங்கபாணியைக் கண்டதும் அவனையும் அவனுடனிருந்தவர்களையும் உற்றுநோக்கலானாள். அதே சமயம் கமலாம்பாள், அம் மங்கையைத் தொட்டு, தாழ்ந்த குரலில்,



“செல்லம்! அதோ மூன்றுபேர் வருகிறார்களே. அவர்களில் வலது கையில் வீரச் சங்கிலி போட்டுக்கொண்டிருப்பவனை நன்றாய்க் கவனி.” என்று கூறவே, செல்லம்மாள், வியப்புற்று, சபாபதி பிள்ளையை மறுபடியும் ஒருதரம் ஏற இறங்கக் கவனித்தாள்.

“நிற்க, எதிர் திசையிலிருந்து வந்துகொண்டிருந்த அம் மூவரும், இவர்களைக் கவனிக்காமல், பேசியவண்ணம், இவர்களைத் தாண்டிப் போய்விட்டனர். அவர்கள் கொஞ்ச தூரம் சென்றதும் செல்லம்மாள், கமலாம்பாளை நோக்கி அடக்க இயலாத ஆவலுடன்,

“அம்மாமி! அவன் யார்? அவனை உங்களுக்குத் தெரியுமோ? என்று வினவ, கமலாம்பாள்,

“அன்று நாம் முருக விலாஸின் சொந்தக்காரராகிய வக்கீல் அனந்தராமய்யருடைய குடும்பத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபொழுது, அவருடைய மூத்த பிள்ளை ராமு, இவ்வூருக்கு வந்ததும், பக்கிரிசாமி என்ற ஒரு சண்டாளனுடன் சேர்ந்துகொண்டு மறுபடியும் அழியவாரம்பித்தானென்று நான் சொன்னேனல்லவா? இப்பொழுது நான் உனக்குக் காண்பித்த பேர்வழிதான் அந்த பக்கிரிசாமி.” என்றாள்.

* * * *

செல்லம்மாள், ஸ்னானம் செய்துவிட்டு, தன் வீட்டிற்குத் திரும்பிவந்தபொழுது, குஞ்சிதபாதம், தன் முகத்தில் ஆனந்தம் கூத்தாட, ஒரு கடிதத்தை வாசித்துக்கொண்டிருந்ததைக் கண்டதும், அம் மங்கை, ஆவலுடன்,

“அண்ணா! யாரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது?” என்று வினவ, குஞ்சிதபாதம், புன்சிரிப்புடன்,

“நீயே வாசித்துப் பார். இந்தா.” என்று கூறியவண்ணம், அக் கடிதத்தை அவளிடம் கொடுக்கவே, அம் மங்கை, அதை வாங்கிக்கொண்டு, சமையற்கட்டை நோக்கி துரிதமாய்ச் சென்றாள். பிறகு, சீக்கிரம் உடுத்திக்கொண்டு,

ஆவலுடன் அக் கடிதத்தை வாசித்தாள். அது கீழ்க்கண்டவாறு :—

" தியாகசமுத்திரம்

க்ஷேமம்.

குஞ்சிதபாதத்துக்கு அநேக ஆசீர்வாதம். இப்பவும் நான் போனவாரம் தஞ்சாவூர் போயிருந்தபொழுது உன் சிநேகிதன் மணியன் நீ என் பெண் விசாலாக்ஷியை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுவதாகவும் ஆனால் உன் தந்தைக்கும் அவளுடைய தந்தைக்கும் இருந்த மனஸ்தாபத்தால் அவர் தன் பெண்ணை உனக்குக் கொடுக்கமாட்டாரென்று நினைத்து சும்மாயிருப்பதாகவும் சொன்னான். நேற்று நான் தியாகசமுத்திரம் திரும்பி வந்ததும், இதை அவரிடம் (தன் பர்த்தாவிடம்) சொன்னேன். அவர் தனக்கு உன்னிடம் மனஸ்தாபமில்லையென்றும், உனக்கு இன்னும் இஷ்டமிருந்தால் தன் பெண்ணைக் கொடுக்கத் தயாரென்றும் சொல்லுகிறார். இன்னும், உன் சிநேகிதன் மணியன் உன் ஜாதகத்தையும் என்னிடம் கொடுத்திருந்தால், நான் அதை இன்று காலமே தற்செயலாய் இவ்வூருக்கு வந்திருக்கும் அரியக்குடி ஜோஸ்யரிடம் காண்பித்தேன். அவர் இந்த வரன்தான் நிச்சயமாகுமென்று சொல்லிவிட்டார். அவர் (தன் பர்த்தா) என்னை முதலில் உனக்கு எழுதி உன் அபிப்பிராயமென்னவென்று கேட்கச் சொன்னதால் இக் கடிதம் எழுதியிருக்கிறேன். நீ என் குழந்தையை கல்யாணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாயென்பதை அறிந்ததும் எனக்குண்டான சந்தோஷம் தெய்வத்துக்குத்தான் தெரியும். ஆகையால் நீ சம்மதமென்று மறு தபாலில் பதில் போடுவாயென்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். என் பெண் விசாலாக்ஷியும் உன்னை விவாஹம் செய்துகொள்வதில் மிகவும் இஷ்டமுள்ளவளென்பது அவளுடைய நடவடிக்கையிலிருந்தே நன்றாய்த் தெரிகிறது. எப்படியாவது இந்த இரண்டு குடும்பங்களும் இனிமேலாவது மறுபடியும் ஒன்று சேர்ந்து நாம் எல்லோரும் சந்தோஷமாயிருப்போமென்று நம்புகிறேன்.



குழந்தை செல்லம்மாள் சௌக்யமா? அவளைப் பார்க்க நானும் விசாலாக்ஷியும் மிகவும் ஆவலுடனிருக்கிறோம். சம்மதமென்று உன்னுடைய பதில் கிடைத்ததும் நாங்கள் எல்லோரும் அங்கு வருகிறோம். வேறு விசேஷமில்லை.

வேணும் ஆசீர்வாதம்,

உன் பிரியமுள்ள அத்தை,

சீதாலக்ஷ்மி."

இக் கடிதத்தை வாசித்து முடித்ததும், செல்லம்மாள் தன் களிப்பின் மிகுதியால் சிறு குழந்தைபோல் குதிக்கவே, அதைக் கண்ட சமையற்காரி காவேரி அம்மாள், வியப்புற்று,

"செல்லம்! என்ன விசேஷம்?" என்று வினவ, அம் மங்கை,

"பாட்டி! விசாலாக்ஷியென்று எங்களுடைய அத்தை பெண் ஒருவள் இருக்கிறாளென்றும், அவளை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்பட்டு அண்ணா வேறு பெண்ணை கல்யாணம் செய்துகொள்ள சம்மதிக்கவில்லை யென்றும் சொன்னேனல்லவா? அவளை அண்ணாவுக்குக் கொடுக்கத் தயாரென்று இதோ எங்களுடைய அத்தை கடிதம் எழுதியிருக்கிறாள். இருங்கள்; இதோ வந்துவிட்டேன்." என்று கூறிவிட்டு மறுபடியும் தன் தமயனிடம் ஓடிச்சென்று,

"அண்ணா! முதலில் இதற்கு பதில் எழுதிவிட்டு மறு காரியம் பார்." என்று கூறவே, குஞ்சிதபாதம்,

"என்னடி இவ்வளவு அவசரம்? சாப்பிட்டுவிட்டு எழுதக்கூடாதா? அடடா; மறந்தேபோய்விட்டேனே. செல்லம்! இன்று முருக விலாஸில் ஒரு ஆச்சர்யகாமான காரியம் நடந்தது." என்றார். இதைக் கேட்டதும், அப் பெண்மணி வியப்புற்று,

"என்ன நடந்தது?" என்று கேட்க, குஞ்சிதபாதம், கிருஷ்ணமூர்த்தி முதல்நாள் கூறியதை முதலில் சொல்லிவிட்டு,

"அவன் ஒரு பெரிய பேர்வழி. இன்று நானும் அவனும் பேசிக்கொண்டிருந்தபொழுது, சாரங்கபாணி சபாபதி பிள்ளை யென்ற ஒருவனுடன் அங்கு வந்தான். கிருஷ்ண மூர்த்திக்கு ஆதியிலிருந்தே இந்த சாரங்கபாணியிடம் சந்தேகமுண்டாம். ஆகவே, சாரங்கபாணி தன்னுடன் மற்றொருவனை அழைத்துக்கொண்டுவருகிறானென்பதை அறிந்ததும், அவர்கள் அவசியம் மாடிக்குப் போவார்களென்று எதிர்பார்த்து, அவர்கள் அங்கு தனிமையில் என்ன பேசுகிறார்களென்று கவனிக்குமாறு என்னைக் கேட்டுக்கொள்ளவே, நான் அவர்கள் பேசிய எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தேன். சாரங்கபாணி மகா அயோக்கியனென்பதில் இப்பொழுது சந்தேகமில்லை." என்றார். பிறகு, சாரங்கபாணியும் சபாபதிபிள்ளையும் முருக விலாஸ் மாடியில் பேசிக்கொண்டதையும் விபரமாய்க் கூறினான். இதைக் கேட்டதும், செல்லம்மாள், திகைப்புற்று கொஞ்சநேரம் தன் தமயனை உற்றுநோக்கியவண்ணம் நின்றுவிட்டு, பிறகு

"அண்ணா! இந்த சபாபதி பிள்ளை கையில் விரச்சங்கிலி போட்டுக்கொண்டு இருக்கிறானோ?" என்று வினவினாள். குஞ்சிதபாதம், வியப்புற்று,

"போட்டுக்கொண்டிருக்கிறான். ஏன்? அவனை நீயும் பார்த்தாயா?" என்று கேட்கவே, அம் மங்கை, வக்கீல் அனந்தராமய்யருடைய குடும்பத்தைப்பற்றி டாக்டர் குப்புஸ்வாமி அய்யருடைய ஸம்ஸாரம் கமலாம்பாள் கூறியதையும், பிறகு அன்று அவ்விருவரும் நதிக்குப் போகும்பொழுது சபாபதி பிள்ளையைக் கண்டதும், கமலாம்பாள் கூறியதையும் விபரமாய்க் கூறினாள். இதைக் கேட்டதும், குஞ்சிதபாதம், மேலும் ஆச்சரியப்பட்டவராய்,

"என்ன ஆச்சரியம்? சரி; நான் மறுபடியும் சென்று கிருஷ்ணமூர்த்தியைப் பார்க்கவேண்டும். அடாடா; இன்னொரு சமாசாரம் சொல்ல மறந்துவிட்டேனே. செல்லம்! இந்த கிருஷ்ணமூர்த்திக்கு இன்னும் விவாகமாகவில்லையாம்." என்றார். அப் பெண்பாவை, ஒன்றும் புரியாமல்,



"ஆதலால் என்ன?" என்று வினவ, குஞ்சிதபாதம், சிரித்துக்கொண்டே,

"அவன் உன்னை பார்த்ததுமுதற்கொண்டே உன் குணங்களைப் புகழ்ந்து—" என்று மேலே பேசுமுன், செல்லம்மாள்,

"உனக்கு வேறு வேலை இல்லையோ?" என்று கூறிய வண்ணம் ஓடி மறைந்தாள். ஆனாலும் கிருஷ்ணமூர்த்தியின் நாமதேயத்தைக் கேட்டதும் அவளுடைய அழகிய முகம் மலர்ந்தது.

* * * *

டாக்டர் குஞ்சிதபாதம், தன் போஜனாதிகளை முடித்துக்கொண்டு, சென்று, கிருஷ்ணமூர்த்தியிடம் சபாபதி பிள்ளையின் வாஸ்தவப்பெயர் பக்கிரிசாமி யென்று கூறவே, அவ் வாலிபன் திடுக்கிட்டான். பிறகு சுமார் 5 நிமிஷ நேரம் பேசவும் சக்தியற்றவன்போல் காணப்பட்டான். வரவர அவனுடைய முகம் வியக்கதக்கவிதம் மாறியது. கடைசியில்,

"பேஷ்! இவன்தானா பக்கிரிசாமி. ஆமாம்; டாக்டர் வாள்! இக் கார்யத்தில் உங்களுடைய தங்கையின் உதவி மிகவும் முக்கியமானது." என்றான். குஞ்சிதபாதம்,

"அதிருக்கட்டும். நீர் இப்பொழுது என்ன செய்யப் போகிறீர். அவர்களில் ஒருவன் தினந்தோறும் இரவில் இவ் வீட்டிற்குள் நுழையப் பிரயத்தனப்படுவானென்பது திண்ணம். நீரே மாடி ஹாலில் 75000 ரூ மதிப்புள்ள நகைகள் இருக்கின்றனவென்று சொல்லுகிறீர். அவைகளை அவர்கள் கண்டுபிடித்துவிட்டால்"—என்று மேலே பேசுமுன், கிருஷ்ணமூர்த்தி, அமைதியுடன்,

"அவர்கள் கண்டுபிடித்துவிட்டால் பாதகமில்லை. அவைகளைக் கண்டுபிடிக்கும்பொருட்டு நானும் ஒவ்வொரு நாளும் தேடிக்கொண்டு இருக்கிறேன். அப்படியே அவைகள் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டாலும், அவர்கள்

அதை எடுத்துக்கொண்டு போகமுடியாது. எனக்குத் தெரியாமல் எவனும் மாடிக்குள் நுழைவது அசாத்தியம். நான் அஸ்தமித்ததும் மாடி ஹாலில்தான் இருப்பேன்.'' என்றான். குஞ்சிதபாதம்,

''மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி! நீர் மகா சமர்த்தனென்பது எனக்குத் தெரியும். ஆனாலும் நாம் இதில் போலீஸாரைக் கலந்துகொள்வது உசிதமென்று எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் அவர்கள் நால்வர். இன்னும் அவர்களில் ஒவ்வொருவனும் மகா தந்திரசாலியென்பது நிச்சயம்.'' என்று கூறவே, கிருஷ்ணமூர்த்தி,

''டாக்டர்வாள்! நீங்கள் சொல்வது நியாயமே. ஆனால் நாம் போலீஸாருடைய உதவியைக்கொண்டு இதைக் கண்டுபிடிப்போமானால், தற்சமயம் களவு போயிருக்கும் அக்கடிதங்களில் அடங்கியிருக்கும் விஷயங்களெல்லாம் வெளியாய்விடுமென்று உங்களுக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். வக்கீல் ஜகதீசய்யர் தன் நண்பர் அனந்தராமய்யருடைய வம்சத்தின் நல்ல பெயரைத்தான் நாம் முதலில் கவனிக்கவேண்டுமென்று சொல்லுகிறார். ஆகையால் போலீஸாரை நம்முடன் சேர்த்துக்கொள்ளும் காரியத்தில் நாம் அவசரப்படவேண்டாம். அவர்களுடைய உதவி இல்லாமலே நாம் இதை இரஹஸ்யமாய்க் கண்டுபிடிக்க முடியுமாவென்று பார்ப்போம். அது சாத்தியமில்லாவிட்டால் பிறகு யோசிப்போம்.'' என்றான்.

## அத்தியாயம் 11.

அதே தினம் மாலை சுமார் 5½ மணி இருக்கும்.

அச்சமயம் மாயவரத்தில் நம் குமாஸ்தா வாஞ்சி அய்யர் தன் வீட்டில் தன் ஸம்சாரத்துடன் பேசிக்கொண்டிருந்தார். சற்றுநேரத்திற்கெல்லாம், யாரோ அவ்வீட்டிற்குள் நுழையும் சப்தம் கேட்கவே, வாஞ்சி அய்யர் எழுந்து, முன்கட்டுக்குப் போய் பார்த்ததும், அவ்விதம்



வந்தது சபாபதி பிள்ளையெனக் கண்டார். உடனே அவனை அவர், ஆவலுடனும் சந்தோஷத்துடனும் வரவேற்று, தாமதமின்றி மாடியிலிருந்த தன் அறைக்கு அழைத்துச் சென்று,

''சபாபதி பிள்ளைவாள்! என்ன சமாசாரம்?'' என்று வினவினார்.

சபாபதி பிள்ளை:—சமாசாரமென்ன? ஐயரே! இப்பொழுது நாம் செய்திருக்கும் ஏற்பாடு திருப்திகரமாயில்லை. நமக்கு அந்த பங்களாவின் மாடி ஹாலில் அந்நகைகள் இருக்கின்றனவென்றுமட்டும் தெரியுமேயொழிய அவைகள் அதில் எங்கு இருக்கின்றனவென்று தெரியாது. அந்த ஹாலில் பல அலமாரிகளும் பீரோக்களும் இருப்பது உமக்கே தெரியும். இவை எல்லாவற்றிலும் தேடிப்பார்ப்பதற்கு வெகுநேரம் பிடிக்கும். பகலில் சாரங்கபாணி ஒன்றும் செய்ய முடியாது. இரவில் சிங்காரவேலு அந்த வீட்டிற்குள் நுழைந்தபோதிலும் நன்றாய்த் தேடுவது முடியாத காரியம். முதலில் அவன் அவ்வீட்டிற்குள் நுழைவதே லேசான காரியமல்ல. ஏனெனில் இப்பொழுது அதில் குடியிருக்கும் ஐயர் தோட்டத்தில் கோம்பை நாய் ஒன்றை அவிழ்த்து விட்டுவிடுகிறார். வாஸ்தவம்; அதை நாம் எளிதில் விஷம்வைத்துக் கொன்றுவிடலாம். ஆனால் அது சந்தேகத்திற்கிடம். ஆகையால் நான் ஒரு யோசனை—

வாஞ்சி அய்யர்:—என்ன அது? சீக்கிரம் சொல்லும்.

சபாபதி பிள்ளை:—நாம் பம்பாயிலிருக்கும் தியாகராஜன் எழுதிக்கொடுத்ததுபோல் ஒரு கடிதத்தை எழுதி, அதுடன் சாரங்கபாணியை வக்கீல் ஜகதீசய்யரிடம் அனுப்பினோம். அவரும் நம்பி, அவன் முருக விலாஸ் மாடியில் சித்திரவேலை செய்ய ஏற்பாடு செய்தார்.

வாஞ்சி அய்யர்:—ஓய்! இதெல்லாம் எனக்குத் தெரிந்த விஷயம்தானே. எதற்காக மறுபடியும் கதை

பண்ணுகிறீர். உம்முடைய புதிய யோசனை என்ன? சொல்லும்.

சபாபதி பிள்ளை:—சரி; உம்முடைய வக்கில் பம்பாயிலிருக்கும் அந்தப் பையனை இதுவரையில் பார்த்திருக்கிறாரோ?

வாஞ்சி அய்யர்:—எப்பொழுதோ அவனுடைய 13வது பிராயத்தில் ஒருதரம் பார்த்திருக்கிறாராம்.

சபாபதி பிள்ளை:—ஆகையால், நாம் இப்பொழுது மற்றொருவனை அவன்தான் தியாகராஜனென்று அவரிடம் அனுப்பினால் அவர் அதைக் கண்டுபிடிக்க முடியுமோ?

வாஞ்சி அய்யர்:—ஓய்! உமக்கு என்ன பைத்தியமோ? ஏன் காணும்! திடீரென்று ஒருவன் வந்து நான்தான் தியாகராஜனென்று சொன்னால் அவர் நம்புவாரா?

சபாபதி பிள்ளை:—ஸ்வாமி! ஒருவன் அப்படி திடீரென்று வருவானா? நம்பத்தக்க ஏற்பாடுகளுடன் தான் வருவான்.

வாஞ்சி அய்யர்:—அதென்ன ஏற்பாடு?

சபாபதி பிள்ளை:—நான் இன்று இரவே புறப்பட்டு சென்னை போகிறேன். பிறகு அங்கிருந்து நான் தியாகராஜன் எழுதுவதுபோல், தான் திடீரென்று புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்துவிட்டதாகவும், மறுதினமே சென்னையிலிருந்து புறப்பட்டு மாயவரம் வருவதாகவும், வக்கீல் ஜகதீசய்யருக்கு ஒரு கடிதம் எழுதுகிறேன். தியாகராஜனுடைய கையெழுத்தைப் போல் என்னால் எழுதமுடியுமென்பது உமக்கு ஏற்கனவே தெரியும். இக்கடிதத்தை பார்த்ததும் வக்கீல் சந்தேகிக்கவே மாட்டார்.

வாஞ்சி அய்யர்:—(திகைப்புற்று) பேஷ்! இது அபாரமான வேலையாய் இருக்கிறதே. ஆமாம்; கடிதம் நீர் எழுதிவிடலாம். தியாகராஜ வேஷம் யாருக்குப் போட்டு நீர் ஜகதீசய்யரிடம் அனுப்புவீர்?



சபாபதி பிள்ளை:—அதற்கும் நம்மிடம் ஆஸாமி இருக்கிறான். பம்பாயிலிருக்கும் அந்தப் பையனுக்கு சுமார் 24 வயதிருக்குமென்று நீர் சொன்னீர். நம் சிங்காரவேலுக்கும் அதே வயதுதான். இன்னும் சிங்காரவேலுக்கு பிராமண வேஷம் போட்டால் நன்றாய்ப் பலிக்கும்.

வாஞ்சி அய்யர்:—ஏனய்யா! சிங்காரவேலு வக்கீல் அனந்தராமய்யர் வீட்டில் கொஞ்ச காலம் வேலைக்காரனாயிருந்ததை இதற்குள் மறந்துவிட்டீரே. அவனை வக்கீல் ஜகதீசய்யர் அடிக்கடி பார்த்திருக்கிறார்.

சபாபதி பிள்ளை:—ஸ்வாமி! அதைப்பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். நான் அவனுக்கு பிராமண வேஷம் போட்டதும், அவனை அவனுடைய அப்பனாலும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது.

வாஞ்சி அய்யர்:—பேஷ்! அப்படியா? சரி; நீர் என்ன வேண்டுமானாலும் செய்யும். சபாபதி பிள்ளைவாள்! இது எவ்வளவு அபாயகரமான கார்யமென்பது உமக்கே தெரியும். நீர் ஏற்கனவே இதைக் காட்டிலும் அபாயமுள்ள பல வேலைகளைச் செய்திருக்கலாம். ஆனால் நானோ பிராமணன். பிள்ளை குட்டிக்காரன். நாம் செய்வது கண்டுபிடிக்கப்பட்டு, நானும் உங்களுடன் மாட்டிக்கொண்டால்— அடேயப்பா! அதை நினைக்கும் பொழுதே என் சுவாஸம் நின்றுவிடும் போலிருக்கிறது.

சபாபதி பிள்ளை:—ஸ்வாமி! நீர் இப்பேர்ப்பட்ட தொடைநடுங்கி என்று நான் நினைக்கவே இல்லை. இதில் நீர் பயப்படக் காரணமே கிடையாதே. இதை ஜகதீசய்யர் கண்டுபிடிக்க முடியாதென்பது நிச்சயம். அப்படியே அவர் கண்டுபிடித்து சிங்காரவேலு மாட்டிக்கொண்டபோதிலும் நீர் அவனை உமக்கு முன் பின் தெரியாதென்று சொல்லிவிடலாமே.

வாஞ்சி அய்யர் :—வாஸ்தவம். நான் சொல்லிவிடலாம். ஆனால் சிங்காரவேலு சும்மாயிருக்கவேண்டுமே. தான் மாட்டிக்கொண்டதும் அவன் என்னையும் சந்தியில் இழுக்கமாட்டானென்பது என்ன நிச்சயம்? அவன் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டுவிட்டால் என் கதி என்னவாகும்? ஆகையால் நீர் ஒரு கார்யம் செய்யும்.

சபாபதி பிள்ளை :—என்ன வேண்டும்? சீக்கிரம் சொல்லும்.

வாஞ்சி அய்யர் :—சிங்காரவேலுவும் சாரங்கபாணியும் சேர்ந்துகொண்டு, ரங்கூனில் ஒரு கொலை செய்தார்களென்பதை எளிதில் ரூபிக்கக்கூடிய சில கடிதங்கள்—

சபாபதி பிள்ளை :—(திடுக்கிட்டு) ஓஹோஹோ! அவைகளையும் உம்மிடம் கொடுக்கச் சொல்லுகிறீரோ?

வாஞ்சி அய்யர் :—ஆமாம்; அதில் உமக்கென்ன நஷ்டம்?

இதைக்கேட்டதும் சபாபதி பிள்ளை சுமார் கால் மணி நேரம் சிந்தித்துவிட்டு, முடிவில் "சரி; நாம் இவனிடம் மாட்டிக்கொண்டுவிட்டோம். என்னுடைய கடிதங்களே இவனிடம் இருக்கும்பொழுது அவர்களுடைய கடிதங்களை இவனிடம் கொடுப்பதில் என்ன பிசகு? இன்னும் இவன் பயத்தினால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு அவைகளைக் கேட்கிறானே யொழிய, எங்களை மோசஞ் செய்ய இவன் துணியமாட்டான்." என்று நினைத்தவன் போல், அக் கடிதங்களையும் கும்பகோணத்தில் பிறந்து வளர்ந்த நம் குமாஸ்தா வாஞ்சி அய்யரிடம் கொடுக்க சம்மதித்தான்.

---

## அத்தியாயம் 12.

வக்கீல் ஜகநிசய்யருடைய வீட்டிலிருந்து களவுபோன அக் கடிதங்களில் அடங்கியிருந்த இரஹஸ்யமென்னவென்பதை அறிய நம் நேயர்கள் ஆவலுடன் இருக்கக்கூடுமாகையாலும், ஆனால் அதை நாம் வேறுவழியில் வெளியிட



நியாயமில்லையாகையாலும் இவ்வத்தியாயத்தில் சுமார் 10 வருஷ காலத்துக்குமுன் குற்றாலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்களைக் கூறுவோம்.

ஜகநிசய்யருடைய நண்பர் வக்கீல் அனந்தராம அய்யருக்கு, தற்சமயம் உயிருடனிருந்த புதல்வன் தியாகராஜனைத் தவிர, ராமு எனப் பெயர்கொண்ட மற்றொரு புதல்வன் இருந்தானென்றும், இந்த ராமு சிறு பிராயத்திலேயே துர்மார்க்கத்தில் பிரவேசிக்க, அவனை மாயவரம் போன்ற பெரிய நகரங்களில் வைப்பது பிசகென நினைத்து, அனந்தராமய்யர், தன் நிலங்களைக் கவனித்துக்கொள்ளும் பொருட்டு, அச் சிறுவனை அபிலாண்டம்மாள் என்ற ஒரு சமையற்காரக் கிழவியுடன் குற்றாலத்தில் வைத்தாரென்றும், ஆனால் ராமு குற்றாலத்துக்கு வந்த பிறகும் பக்கிரிசாமி என்ற ஒரு அயோக்கியசிகாமணியுடன் சேர்ந்துகொண்டு மறுபடியும் அழியவாரம்பித்தானென்றும், நம் கமலாம்பாள்மூலம் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். அச்சமயம் குற்றாலத்தில் பேருக்கு மளிகை வியாபாரம் செய்துகொண்டிருந்த இந்த பக்கிரிசாமி சூதாட்டம், குடி இத்தகைய கார்யங்களில் மிகவும் அனுபவமுள்ளவனாகையால், ராமு எளிதில் அவனுடைய வலையில் சிக்கிக்கொண்டது வியக்கத்தக்கதல்ல. ஆகவே, அச் சிறுவன் குற்றாலம் வந்துசேர்ந்த ஒரு மாதத்திற்குள் அவனும் பக்கிரிசாமியும் இணைபற்ற தோழர்களாய்விட்டனர். பக்கிரிசாமிக்கு அவ்வூரில் சுமார் 5000 ரூ மதிப்புள்ள வீடு ஒன்று உண்டு. ஆனால் அவன் அதை பந்தகம் வைத்து ஏற்கனவே கிட்டத்தட்ட 3500 ரூ கடன் வாங்கியிருந்தான். அவ் வீட்டின் கீழ்பாகத்தில், பக்கிரிசாமி, பேருக்கு ஒரு மளிகைக் கடையை வைத்துக்கொண்டு, மேல் பாகத்தில் வசித்துவந்தான். அவன் தன்னைப் பார்த்தவர்கள் சீக்கிரம் மயங்கத்தக்கவிதம் நடந்துகொள்வதில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவனாகையால், அவ்வூர் வாசிகள் அனைவரும் அவனை ஒரு பரம யோக்கியனென்று நினைத்துவந்தனர். அதுவுமன்றி அச்சமயம் அவனுக்கு உலகில் பந்துக்களாவது அவன் செய்த கார்யங்களைக்

கவனிக்கத்தக்க நண்பர்களாவது ஒருவரும் கிடையாதாகையால், அவன் இஷ்டப்பிரகாரம் தன் காலத்தைக் கழிப்பதில் சிறிதும் கஷ்டமில்லாமலிருந்தது. ஆனால் அவன் செய்யும் கார்யங்களைப் பிறர் கண்டுபிடிப்பதும் லேசான கார்யமல்ல. அவனுக்கு சம்பாத்தியம் தன் கடையைக் காட்டிலும் சூதாட்டத்திலிருந்தேயாகையால், அனந்தராம அய்யருடைய புதல்வன் ராமுக்கு ரங்காட்டத்தில் மிகவும் பைத்தியமுண்டென்பதை அவன் அறிந்துகொண்டதும், தினந்தோறும் அச் சிறுவனுடன் ரங்காட ஆரம்பித்தான். ராமுக்கு சூதாட்டத்தில் பிரியம் மட்டும் உண்டேயொழிய சாமர்த்தியம் கொஞ்சமும் கிடையாதாகையால், பக்கிரிசாமி அநேகமாய் ஒவ்வொருநாளும் குறைந்தது 10 ரூபாயாவது அவ் வாலிபனிடமிருந்து ஜயிக்கலானான். ஆகவே, ராமு குற்றாலம் வந்த ஒருவருஷ காலத்திற்குள் அவன் இந்த ரங்காட்டத்தின் பலனாய் ரூ. 3000க்குமேல் பலரிடமிருந்து கடன் வாங்கிவிட்டான். அவ்விதம் அவன் எளிதில் கடன் வாங்க வழி காண்பித்ததும் நம் பக்கிரிசாமியே. அவன் அவ்விதம் அச் சிறுவனிடமிருந்து ஏராளமாய் பணத்தைப் பறித்துக்கொண்டபோதிலும், வெளுத்ததெல்லாம் பாலென்று நினைக்கும் சுபாவமுள்ள ராமுவின் மனதில் பக்கிரிசாமியைப்பற்றி சந்தேகமாவது வெறுப்பாவது சிறிதும் ஏற்படாமல், அவனிடம் ஒரு வியக்கத்தக்க நம்பிக்கையும் பிரியமும் ஏற்பட்டன. எனவே, பக்கிரிசாமி அச் சிறுவனை ஒரு பொம்மைபோல் ஆட்டலானான். இவ்விதம் சுமார் இரண்டு வருஷகாலம் கழிந்தது.

ஒருநாள் மாலை ராமு தன் வழக்கப்பிரகாரம் பக்கிரிசாமியின் வீட்டிற்கு வந்துகொண்டிருக்கையில், தன் நண்பனுடைய வீட்டின் பக்கத்து வீட்டு மாடியில் சுமார் 22வயதுள்ள ஒரு பெண், அவள் தாஸியோவென சந்தேகிக்கத்தக்கவாறு, நின்றுகொண்டிருந்ததைக் காணவே, அச் சிறுவன் அவளை உற்றுநோக்கலானான். அப் பெண்ணின் முகத்தில் தென்பட்ட ஒரு பயமற்ற பார்வையையும் இதர சின்னங்களையும் பார்த்ததும், ராமு "ஆஹா! நான் கொஞ்சம் சிரமம்



எடுத்துக்கொண்டால் இவள் நிச்சயமாய் நம்மிடம் மாட்டிக்கொள்வாள். ஆமாம்; இவள் யார் தெரியவில்லையே. நேற்றுவரையில் இவ் வீடு காலியாயிருந்ததே." என்று வியப்புற்று, அப்பெண்ணை மறுபடியும் ஒருதரம் கவனித்தான். தன்னை ஒரு அந்நிய வாலிபன் அவ்விதம் உற்றுநோக்குவதை அறிந்தும், அப் பெண் தான் நின்றுகொண்டிருந்த இடத்தைவிட்டு, சிறிதும் நகராமல், "நான் தயார்." என்று கூறுபவள்போல் புன்முறுவல் செய்தவண்ணம், தன் விழிகளைச் சுயட்டவாரம்பித்தாள். ராமுவும் நல்ல அழகும் மாதர்கள் இச்சிக்கத்தக்க ஒரு வசீகரமும் வாய்ந்தவன். நாம் சொன்னதுபோல் அப் பெண் மந்தஹாஸத்துடன் தன்னை நோக்குவதைக் கண்டதும், அச் சிறுவன், மிகவும் சந்தோஷித்தவனாய், தான் வீதியில் நின்றுகொண்டிருந்ததையும் உணராமல், அவளைப் பார்த்துக்கொண்டிருக்கையில், பக்கத்தில் தன் கடையில் உட்கார்ந்துகொண்டிருந்த பக்கிரிசாமி, அச் சிறுவன் அவ்விதம் நிற்கக் காரணமென்னவென்பதை அறிந்தவன்போல் சிறித்துக்கொண்டே,

"ஐயரே! வாரும்." என்று அழைக்கவே, ராமு, திடுக்கிட்டவனாய், துரிதமாய் அவ்விடத்தைவிட்டுச் சென்று பக்கிரிசாமியை நோக்கி, ஆவலுடன்,

"அடுத்த வீட்டு மாடியில் ஒரு பெண்—" என்று மேலே பேசுமுன், பக்கிரிசாமி,

"ஏன்? அவளைக் கண்டு இதற்குள் மயங்கிவிட்டீரோ? ஆனால் நீர் கவலைப்படவேண்டாம். அவள் எளிதில் உமக்குக் கிடைப்பாள்." என்றான். இதைக் கேட்டதும், ராமு, மேலும் சந்தோஷித்தவனாய், அடக்க இயலாத அவசரத்துடன்,

"அதிருக்கட்டும். அவள் யார்?" என்று கேட்கவே, பக்கிரிசாமி,

"அவ் வீட்டை சிங்காரம் செட்டியார் எனப் பெயர் கொண்ட ஒரு ரங்கூன் வியாபாரி 6 மாதங்களுக்கு வாடகைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார். அவருக்கு வயது 60க்கு

மேலிருக்கும். நீர் இப்பொழுது பார்த்த பெண் அவருடைய நான்காவது சம்ஸாரம்.'' என்று விடையளித்தான்.

ராமு :— ஆமாம்; அவருக்கு இவ்வூரில் என்ன காரியம்?

பக்கிரி :—அவர் இவ்வூரில் பிறந்து வளர்ந்தவராம். வியாபாரத்தில் 10 லக்ஷத்துக்குமேல் சம்பாதித்துவிட்டாராம். ஆகையால் இனிமேல் சம்பாதிக்கவேண்டியது அவசியமில்லையென்றும், தன் சொந்த ஊருக்கு வந்துவிடுவதென்றும் தீர்மானித்து வந்திருக்கிறார். சீக்கிரம் இவ்வூரில் பெரிய பங்களா ஒன்று சொந்தத்தில் கட்டப்போகிறார்.

ராமு :—ஓஹோ! அப்படியா? ஆமாம்; அவள் எனக்கு எளிதில் கிடைப்பாளென்று சொன்னீயே. அதற்குக் காரணம் என்ன?

பக்கிரி :—அதற்குக் காரணம் கேட்கவும் வேண்டுமா? செட்டிப்பயலுக்கு வயது 60க்கு மேலாய்விட்டது. அவளோ நல்ல பால்யம். இன்னும் இன்று காலையில் அவள் வந்ததுமுதற்கொண்டு நான் அவளைக் கவனித்ததில், அவள் ஆண் வேட்டை ஆடுகிறாளென்று தோன்றுகிறது. ஆமாம்; நியாயந்தானே.

கிட்டு :—சரி; அந்த வீட்டில் இன்னும் யார் யார் இருக்கிறார்கள்?

பக்கிரி :—சமையல் செய்யும்பொருட்டு கிழவி ஒருவள் இருக்கிறாள். அவளைப் பார்த்தால் பலே திருடிபோல் தோன்றுகிறது. புருஷர்களில் செட்டியைத் தவிர இரு வேலைக்காரர்கள் இருக்கின்றார்கள்.

கிட்டு :—அடபாபமே! இத்தனைபேர் இருக்கும்பொழுது—

பக்கிரி :—அதைப்பற்றி நீர் கவலைப்படவேண்டாம். அவள் சம்மதித்துவிட்டால், லக்ஷம் பேர் இருந்தபோதிலும் பாதகமில்லை. சரி; இப்பொழுது அவ்வீட்டில் அக்கிழவியைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. செட்டி தன் ஆட்களை அழைத்துக்கொண்டு வெளியில் போயிருக்கிறான். நீர் போய் நம் வீட்டின் மொட்டைமாடி



யில் உலாவிக்கொண்டிரும். என்ன நடக்கிறதென்று பார்ப்போம்.

இதைக் கேட்டதும், ராமு ஆவலுடன் மாடிக்கு ஓடினான். அவ்விரு வீட்டு மாடிகளிலும் முன்பாகத்தில் ஒரு பெரிய அறையும், பின்பாகத்தில் நெல் முதலிய தானியங்களைக் காயப்போடும்பொருட்டு விசாலமான ஒரு மொட்டைமாடியும் இருந்தன. இவ்விரு மொட்டை மாடிகளுக்கும் இடையில் சுமார் 4 அடி உயரமுள்ள ஒரு சுவர்தான் உண்டு. ஆகவே, அதில் ஒரு மாடியிலிருப்பவன் மற்றொரு மாடிக்கு தாராளமாய்ப் போகமுடியும். இன்னும் அம் மாடிகளில் நடப்பதை பிறர் கவனிக்க வழியின்றி அவைகளின் வெளிப்பக்கத்தில் நல்ல உயரமுள்ள சுவர்கள் இருந்தன.

நிற்க, ராமு, பக்கிரிசாமியின் வீட்டு மாடிக்கு ஓடிச்சென்று, மேலும் கீழும் உலவவாரம்பித்ததும், தன் வீட்டு மாடியின் முன்பாகத்திலிருந்த அறையில் நின்றுகொண்டிருந்த சிங்காரம் செட்டியாருடைய சம்ஸாரம், அவ் வாலிபனுடைய காலடிச் சப்தத்தைக் கேட்கவே, மொட்டை மாடிக்கு ஓடிவந்து, ராமுவைக் கண்டதும், மறுபடியும் புன்முறுவல் செய்தவண்ணம் அவனை ஏற இறங்கக் கவனித்தாள். உடனே, ராமு அவளுடன் பேசலாமா வென்று யோசித்தான். ஆனாலும், அத்தகைய காரியங்களில் அதுவரையில் அவனுக்கு அனுபவமில்லாததால் தான் அதற்குள் அவளுடன் பேசவாரம்பிப்பது பிசகென நினைத்து தயங்கியவாறு அவன் நின்றுகொண்டிருக்கையில், அப் பெண், ஒருதரம் நாலாபக்கங்களையும் கவனித்துவிட்டு, வியக்கத்தக்க தைரியத்துடன்,

"ஏன் ஸ்வாமி! உங்களுக்கு இந்த ஊர்தானோ?" என்று வினவவே, ராமு, வியப்புற்று, உலகில் தன்னைப் போன்ற அதிர்ஷ்டசாலி ஒருவனும் இருக்கமுடியாதென்று சந்தோஷ சாகரத்தில் மூழ்கியவனாய், பயத்தினாலும் கூச்சத்தினாலும் சரீரம் நடுங்க, தடுமாற்றத்துடன்,

"ஆமாம்," என்று விடையளித்தான்.

மேலே நடந்த எல்லாவற்றையும் விவரித்து எழுதுவது மிகவும் பிசகாகையால் சுருக்கிச் சொல்லிவிடுவோம். இது நடந்த ஒருவாரத்திற்குள் தான் அபேக்ஷிக்கும் காரியத்திற்கு ராஜலெக்ஷ்மி எனப் பெயர்கொண்ட அப் பெண் சம்மதிப்பாளென்பதை நிச்சயமாய் ராமு தெரிந்துகொண்டான். பிறகு, சிங்காரம் செட்டியார் தன் ஆட்களுடன் வெளியில் போகும் சமயத்தை ஆவலுடன் எதிர்பார்த்து, அவர் சென்றதும், பக்கிரிசாமியின் வீட்டு மாடியிலிருந்து அடுத்த மாடிக்குச் சென்று, ராஜலெக்ஷ்மியுடன் தன் இஷ்டப்படி காலங்கழிக்க ஆரம்பித்தான். இவ்விதம் சுமார் 3 மாதங்கள் கழிந்தன. அதன் முடிவில், ஒருநாள் சிங்காரம் செட்டியார் தனிமையில் சிலதினங்கள் ஒரு முக்கிய கார்யத்தை உத்தேசித்து வெளியூர் போகப்போகிறாரென்பதை அறிந்ததும், ராமுக்கு உண்டான சந்தோஷத்தை அப்பேர்ப்பட்ட கார்யத்தில் அநுபவமுள்ள பாபிகளால் தான் ஊகித்துக்கொள்ள முடியும். செட்டியார் சென்ற அதே தினம் இரவு முழுமையும் ராஜலெக்ஷ்மியுடன் கழிப்பதென்று ராமு தீர்மானித்தான். செட்டியார் வீட்டிலிருந்த சமையற்காரக் கிழவி அவ் வீட்டின் கீழ்பாகத்தில் ஒரு அறையிலும், பாக்கியிருந்த அவ்விரு வேலைக்காரர்களும் அவ் வீட்டுத் திண்ணையிலும் படுத்துக்கொள்வது வழக்கமாகையால், மேலே மாடியில் நடந்த அக்கிரமத்தை அவர்களில் ஒருவரும் சந்தேகிக்க நியாமில்லாமலிருந்தது. இதை அறிந்த ராமு, அன்று இரவு ராஜலெக்ஷ்மியைக் கண்டதும், அவளைத் தன் மனைவியென்றே நினைப்பவன்போல் சிறிதும் பயமின்றி அவளுடன் ஸரஸஸல்லாபம் செய்யவாரம்பித்தான். அவன், நடுவில், அப் பெண்ணை நோக்கி,

“ராஜம்! உன் புருஷன் 10 லக்ஷத்துக்கு மேல் சம்பாதித்திருக்கிறாராமே. அப்படியிருந்தும் உன் சரீரத்தில் நல்ல நகைகள் ஒன்றும் இல்லையே.” என்று கூறவே, ராஜலெக்ஷ்மி,

“எனக்கு நகைகள் இல்லாமலில்லை. இவ்வூரில் திருட்டுப் பயம் அதிகமென்று கேள்விப்பட்டதால், வைர நகை



கள் எல்லாவற்றையும் பெட்டியில் வைத்திருக்கிறேன்.” என்றாள். உடனே, ராமு, ஆவலுடன்,

“பேஷ்! அப்படியா? ராஜம்! நீ இதைச் சொன்னதும், அவைகளைப் போட்டுக்கொண்டிருக்கும்பொழுது, உன்னை ஒருதரம் பார்க்கவேண்டும்போல் எனக்கு இருக்கிறதே. அதிக நகைகள் இல்லாதபொழுதே நீ இவ்வளவு அழகாயிருக்கிறாய். அவைகளைப் போட்டுக்கொண்டால் நீ இன்னும் எவ்வளவு—” என்று மேலே பேசுமுன், ராஜலெக்ஷ்மி,

“இதென்ன பெரிய கார்யம்? இருங்கள். இதோ போட்டுக்கொள்ளுகிறேன்.” என்று கூறியவண்ணம், கட்டிலிருந்து கீழே குதித்து, அவ்வறையிலிருந்த ஒரு அழகிய பெட்டியை நோக்கி ஓடினாள். பிறகு, தன் கழுத்தில் ஒரு தங்கச்சங்கிலியிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த ஒரு சாவியினால் அதைத் திறந்து அதற்குள்ளிருந்த ஒரு நகைப் பெட்டியை வெளியில் எடுத்தாள். கால்மணி நேரத்திற்குள் அப் பெண்ணின் சரீரத்தின்மேல் பல வைர நகைகள் பளபளவென்று, கண்களைப் பறிக்கத்தக்க காந்தியுடன், ஜ்வலித்தன.

நிற்க, அதே சமயம் ராமுவின் தோழன் பக்கிரிசாமி என்ன செய்துகொண்டிருந்தானென்று இப்பொழுது கவனிப்போம். முதலில் அவனும் ராஜலெக்ஷ்மியைக் கண்டு மோஹித்து, அவளைத் தன் வலையில் இழுக்கத் தன்னால் இயன்றவரையில் பிரயத்தனப்பட்டான். ஆனால் அப் பெண், ராமுவைப் பார்த்தபிறகு, அவனுடன் தாராளமாய்ப் பேசவும் சம்மதிக்காததால், தான் மேலும் சிரமப்படுவது வீண்கார்யமென நினைத்து விட்டுவிட்டான். நிற்க, நாம் சொன்னதுபோல் ராமுவும் ராஜலெக்ஷ்மியும் நகைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், பக்கிரிசாமி பக்கத்திலிருந்த தன் அறையில் படுத்துக்கொண்டு அவர்கள் பேசியதைக் கவனித்தவண்ணமிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம், ராமு, சந்தோஷத்துடன்:

"ஆஹா! இப்பொழுது உன்னைப் பார்ப்பதற்கே லக்ஷரூபாய் கொடுக்கவேண்டுமே. எங்கே! சமீபத்தில் வா. நன்ருய்ப் பார்ப்போம்." என்று கூறவே, இதைக் கேட்ட பக்கிரிசாமி, வியப்புற்று தன்னைத்தானே கட்டுப் படுத்த முடியாதவனுய், மெள்ள தன் படுக்கையிலிருந்து எழுந்து வெளியே வந்து, சிறிதும் சப்தமின்றி அவ்விரு மாடிகளுக்கும் இடையிலிருந்த சுவரைத் தாண்டிக் குதித்து ராமுவும் ராஜலெக்ஷ்மியும் இருந்த அறையை சமீபித்து, அதன் கதவிலிருந்த ஒரு சந்தின் வழியாய் தன் சுவாஸத் தையும் அடக்கிக்கொண்டு, உள்ளே எட்டிப்பார்த்தான். மறுநிமிஷம் விசனத்துடன், "ஆஹா! இவளைத் தொடும் பாக்கியமும் எனக்குக் கிடைக்கவில்லையே. சரி; இருக்கட் டும்." என்று ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவன்போல் பெருமூச்செறிந்தவண்ணம், மறுபடியும் பூனைபோல் நட ந்து தன் அறைக்குச் சென்ருன்.

மறுநாட்காலை ராமு அவனிடம் தன் வழக்கப்பிரகா ரம் முதல்நாள் இரவு நடந்த எல்லாவற்றையும் வர்ணித்துக் கூறவே, பக்கிரிசாமி, விசனத்துடன்,

"ஐயரே! நீர் எனக்கு ஒரு காரியம் செய்வீரா?" என்று வினவ, அவ் வாலிபன், வியப்புற்று உற்சாகத்துடன்,

"அதில் சந்தேகமென்ன? உன்பொருட்டு நான் என் உயிரையும் கொடுப்பேனென்பது உனக்குத்தான் தெரியுமே." என்ருன். உடனே பக்கிரிசாமி,

"ஐயரே! நீர் இதுவரையில் அவளை அநுபவித்தீரே. நான் அரைமணி நேரமாவது அவளுடன் கழிக்கவேண்டாமா?" என்று கேட்கவே, ராமு திடுக்கிட்டான். ஆனல் மறுவினடி,

"நானு வேண்டாமென்று சொல்லுகிறேன்? எனக்கு ஆக்ஷேபணையே கிடையாது. ஆனல் அதற்கு அவள் சம் மதிக்கவேண்டாமோ?" என்று வினவினன்.

பக்கிரி :—அவள் சம்மதிக்கமாட்டாளென்பது நிச்சயம். ஆனால், நீர் நான் சொல்லுகிறபடி செய்தால் என் இஷ்டம் நிறைவேறும்.

ராமு :—நான் என்ன செய்யவேண்டும் ? சொல்.

பக்கிரி :—நான் சொல்லுகிறபடி நீர் செய்வீரா ? ஒருக்கால் நான் அவளுடன்—

ராமு :—மறுபடியும் ஆரம்பித்துவிட்டாயே. நீ இவ்வளவு தூரம் எனக்கு உதவி செய்ததால்தானே நான் இது வரையில் அவளை அனுபவிக்க முடிந்தது. நீ கேட்கும் பொழுது நான் உதவி செய்யமாட்டேனென்று சொல்வேனா? அசடே! நீ அவளை அனுபவிப்பதில் எனக்கு என்ன ஆக்ஷேபணை ? அவள் என்ன நான் தொட்டுத் தாலி கட்டிய என் பெண்டாட்டியா?

பக்கிரி :—பேஷ்! ஐயரே! இங்கே பாரும். உம்மைப் பார்த்தபிறகு அவள் என்னுடன் பேசுவதுகூட கிடையாது. ஆகையால், அவள் சம்மதிக்கமாட்டாளென்பது திண்ணம். ஆமாம்; நேற்று இரவு அவள் உமக்கு தின்பண்டம், பால் ஏதாவது கொடுத்தாளோ?

ராமு :—அதென்ன இப்படிக் கேட்கிறாய்? பாலும் பக்ஷணமும் இல்லாமலா?

பக்கிரி :—பேஷ் ! அப்படியானால் நீர் ஒரு காரியம் செய்யும். இன்று மாலை நான் உம்மிடம் மயக்க மருந்து ஒன்று கொடுக்கிறேன். அதை நீர் இன்று இரவு போனதும் அவளுக்குத் தெரியாமல் அவளுடைய பாலில் கலந்துவிடும்.

இதைக் கேட்டதும் ராமு மறுபடியும் திடுக்கிட்டான். ஆனாலும் கடைசியில் அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டான்.

* * * *

அன்று மாலை சுமார் 5 மணி இருக்கும்.

அச்சமயம் சுமார் 50 வயதுள்ளவளும் மரகதம் எனப் பெயர்கொண்டவளுமாகிய சிங்காரம் செட்டியாரின் வீட்டு சமையற்காரக் கிழவி அவ் வீட்டின் கொல்லைப்பக்கத்தில் ஒரு மரத்தடியில் கொஞ்ச தூரத்திலிருந்த ஒரு சாலையைக் கவனித்தவண்ணம் நின்றுகொண்டிருந்தாள். சற்றுநேரத்திற்கெல்லாம் பயங்கரத் தோற்றமுள்ள ஒருவன் அவளை நோக்கி வரவே, அக் கிழவி, ஆவலுடன் முன் சென்று,

"கிடைத்ததோ?" என்று வினவ, வந்தவன்,

"கிடைக்காமல் இருக்குமா? ஆனால் அது லேசான பூட்டல்ல. அதற்கு இலகுவில் சாவி அகப்படவில்லை." என்று கூறியவண்ணம் ஒரு சாவியை அவளிடம் கொடுத்துவிட்டு, "சரி; மேலே உன் யோசனை என்ன?" என்று வினவினான். மரகதம்,

"அதான் சொன்னேனே. பகலில் நான் ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால் அவள் (ராஜலெக்ஷ்மி) இப்பொழுது வரவர அனாவசியமாய் கீழே வருவதில்லை. மாடியிலேயே இருக்கிறாள். அங்கு என்னதான் செய்கிறாளோ தெரியவில்லை. ஆகையால் நான் இரவில்தான்—" என்று மேலே பேசுமுன், வந்தவன், முகத்தை சுளுக்கிக்கொண்டு,

"ஏண்டி சனியனே! அவள் இரவில் அந்த அறையில் தான் படுத்துக்கொள்ளுகிறாளென்று நேற்று சொன்னாயே. அப்படியிருந்தால் நீ எப்படி அவ்வறைக்குள் நுழைந்து, அப் பெட்டியைத் திறந்து, அவைகளை எடுக்க முடியும்?" என்று வினவினான். மரகதம்,

"உனக்குத்தான் மூளை இருக்கிறதென்று நினைத்துக்கொண்டிருக்கிறாயோ? அசடே! அவள் அவ்வறையில் படுத்துக்கொண்டிருந்தால் பாதகமில்லை. அவள் தூங்கவாரம்பித்துவிட்டால், நான் அவ்வறைக்குள் நுழைந்து, அவளை ஒரு தடியால் அடித்தபோதிலும் அவள்விழித்துக்கொள்ள

88288



மாட்டாள். ஆகையால் அந்தக் கவலை உனக்கு வேண்டாம்." என்றாள். உடனே வந்தவன்,

"சரி. ஆமாம்; நகைகள் அந்தப் பெட்டியில்தான் இருக்கின்றனவென்பது உனக்கு நிச்சயமாய்த் தெரியுமோ?" என்று வினவ, அக் கிழவி,

"அதில் சந்தேகமில்லை. சரி; நீ இன்று இரவு 11 மணிக்கு நான் சொன்ன இடத்தில் எனக்காகக் காத்துக்கொண்டிரு." என்றாள். வந்தவன்,

"சரி; இங்கே பார். நீ மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.—" என்று கூறிக்கொண்டிருக்கையில், சிங்காரம் செட்டியாருடைய இரு வேலை ஆட்களில் முனியாண்டி எனப் பெயர்கொண்ட ஒருவன், தற்செயலாய் கொல்லைப்பக்கம் வரவே, மரகதமும் அம் மற்றொருவனும் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்ததும், அம் மற்றொருவனை உற்றுநோக்கினான். உடனே அவன், "இவன் யார்? இவனைப் பார்த்தாலே பயமாயிருக்கிறதே." என்று சிந்திக்கையில், அம் மற்றொருவன், "சரி; நான் போகிறேன். சாவியை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்." என்று கூறிவிட்டுப் போய்விட்டான்.

இதைக் கேட்ட முனியாண்டி, வியப்புற்று, "சாவியா? ஓஹோஹோ! இதில் ஏதோ சூதிருக்கிறது." என்று தன்னுள் சொல்லிக்கொண்டே மறுபடியும் உள்ளே சென்றான்.

* * * *

அதே தினம் இரவு சுமார் 10 மணி இருக்கும். மழை பயங்கரமான இடி மின்னல்களுடனும், ஹோ என்ற ஆரவாரத்துடனும், பெய்துகொண்டிருந்தது.

அச்சமயம், பக்கிரிசாமி, தன் வீட்டு மாடியில், பக்கத்து வீட்டில் ராஜலெக்ஷ்மியுடனிருந்த தன் நண்பன் ராமுவை அடக்க இயலாத ஆவலுடன் எதிர்பார்த்தவனாய், நிம்மதியின்றி மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்தான். சற்றுநேரத்திற்கெல்லாம் ராமு வந்து தாழ்ந்த குரலில்,

"பக்கிரிசாமி! நீ கொடுத்த மருந்தை அவளுடைய பாலில் கலந்து கொடுத்துவிட்டேன். அவள் ஏற்கனவே அயர்ந்து தூங்கவாரம்பித்துவிட்டாள். நீ போ." என்று கூறவே, பக்கிரிசாமி,

"அவசரப்படாதேயும். கொஞ்சநேரம் கழித்துப் போகிறேன்." என்றான்.

அரைமணி நேரம் கழிந்ததும், பக்கிரிசாமி போய் விடவே, ராமு தன் தோழனுடைய படுக்கையில் படுத்துக் கொண்டு, நித்திரையின்றி அப்படியும் இப்படியும் புரள வாரம்பித்தான்.

மேலும் சுமார் ஒரு மணி நேரம் கழிந்தது.

அதன் முடிவில் பக்கிரிசாமி, மறுபடியும் அவ்வறைக் குள் ஓடிவந்து, ராமுவைத் தொட்டு, அவசரத்துடன்,

"ஐயரே! ஐயரே!" என்று அழைக்கவே, ராமு, திடுக்கிட்டவனாய்த் தாவியெழுந்து நின்றுகொண்டு,

"என்ன சமாசாரம்?" என்று வினவ, பக்கிரிசாமி,

"ஐயரே! மோசம் போய்விட்டோம். நிதானம் தெரியாததால், அம் மயக்க மருந்தை அதிகம் கொடுத்துவிட்டேன். அவள் இறந்துவிட்டாள்." என்றான்.

இதைக் கேட்டதும் ராமு, திகிலுற்று உடனே வாயைத் திறந்து பேசவும் சக்தியற்றவனாய், கொஞ்ச நேரம் ஸ்தம்பித்து நின்றான். மறு விநாடி, அவனுடைய கால்கள் நடுங்கவாரம்பிக்கவே, நிற்கவும் முடியாமல், அப்படியே மறுபடியும் படுக்கையில் உட்கார்ந்தான். கடைசியில் தடுமாற்றத்துடன்,

"அடே சண்டாளா! என்ன காரியம் செய்துவிட்டாய்? அநியாயமாய் ஒரு பெண்ணைக் கொன்றுவிட்டாயே." என்று நிந்திக்கவே, பக்கிரிசாமி,

"ஐயரே! அவளுக்காக நீர் பிறகு அழலாம். இப்பொழுது எழுந்திரும் நாம் தப்பித்துக்கொள்ளும் வழியைப்



பார்ப்போம்." என்று கூறியவண்ணம், அவ் வாலிபனை பலாத்காரமாய்த் தூக்கி நிறுத்தி, "வாரும். உம்முடைய வீட்டிற்குப் போய்விடுவோம்." என்று கூறிவிட்டு, அவனை இழுத்துக்கொண்டு கீழே ஓடினான். கீழே வந்ததும் தன் வீட்டு வாசற் கதவைப் பூட்டிக்கொண்டு, "ஐயரே! வாரும்." என்று மறுபடியும் கூறிவிட்டு, முருக விலாஸை நோக்கி துரிதமாய் நடந்தான். ராமு, தான் என்ன செய்கிறோமென்பதையும் அறியாதவன்போல், அவனைப் பின்பற்றி ஓடினான். முருக விலாஸின் சமீபம் வந்ததும் பக்கிரிசாமி, ராமுவைத் தொட்டு, "ஐயரே! நீர் என் வீட்டிற்கு வந்தது உம்முடைய சமையற்காரக் கிழவிக்குத் தெரியுமோ?" என்று வினவ, ராமு,

"தெரியாது. என் வீட்டிற்கு வாசற்பக்கத்தில் இரு கதவுகளுண்டென்பது உனக்கே தெரியும். ஒன்று எப்பொழுதும் உட்பக்கம் தாளிடப்பட்டிருக்கும். நான் இரவில் உன் வீட்டிற்கு வருவது அக் கிழவிக்குத் தெரிந்துவிட்டால் அவள் பிறகு என் தந்தையிடம் சொல்லிவிடுவாள். அதற்காக, நான் இரவில் உன் வீட்டிற்கு வருவதாயிருந்தால் முதலில் போய் மாடியில் படுத்துக்கொண்டுவிடுவேன். பிறகு அக் கிழவி தூங்கியதும், நான் சொன்ன உட்பக்கம் தாளிடப்பட்டிருக்கும் அக் கதவைத் திறந்துகொண்டு, வெளியே வந்து அதை வெளிப்பக்கம் பூட்டிக்கொண்டு, உன் வீட்டிற்கு வருவது வழக்கம். பிறகு, திரும்பிப் போகும் பொழுது, அதே வழியாய்த்தான் உள்ளே போவேன். ஆனால், அப்பொழுது பூட்டைக் கையில் எடுத்துக்கொண்டு, கதவை இருந்ததுபோலவே உட்பக்கம் தாளிட்டுக்கொண்டு போய்விடுவேன்." என்று விடையளித்தான். உடனே பக்கிரிசாமி,

"பேஷ்! ஆனால் நீர் இன்னும் மாடியில் படுத்துக் கொண்டிருக்கிறீரென்றுதான் அக் கிழவி நினைத்துக்கொண்டிருப்பாளோ?" என்று வினவ, ராமு, "ஆமாம்." என்று விடையளித்ததும், பக்கிரிசாமி, "சரி; இப்பொழுது நாம் இருவரும் அதே வழியாய் மாடிக்குப் போய்விடுவோம்.

போலீஸார் நம்மை சந்தேகிக்க நியாயமே இல்லை. அப்படியே அவர்கள் சந்தேகித்து, நம்மைப்பற்றி விசாரித்தாலும் நீர் இரவு முழுமையும் வீட்டைவிட்டு வெளியில் போகவில்லையென்று அக் கிழவி சொல்லிவிடுவாள். நான் இரவு 8 மணிக்கே உம்முடைய வீட்டிற்கு வந்து உம்முடன் படுத்துக்கொண்டுவிட்டதாக நீர் சொல்லிவிடலாம்.” என்றான்.

ஆகவே, மேலும் 10 நிமிஷ நேரத்திற்குள் அவ்விருவரும் ராமுவின் சமையற்காரி அயிலாண்டம்மாள் சிறிதும் சந்தேகிக்க வழியின்றி முருக விலாஸின் மாடிக்குப் போய்விட்டனர். ராமுவின் அறையில் விளக்கு ஒன்று இன்னும் எறிந்துகொண்டிருந்தது. ராமு, தன் அறைக்குள் நுழைந்ததும், ஏற்கனவே போடப்பட்டிருந்த தன் படுக்கையில் வெட்டுப்பட்ட மரம்போல் மடேரென்று விழுந்தான். இதற்குள் கவலையாலும் பயத்தாலும் அவனுடைய முகம் வெளுத்து பார்ப்பதற்கே விகாரமாயிருந்தது. ஆனால் அவன், மறு நிமிஷம் மறுபடியும் எழுந்து உட்கார்ந்துகொண்டு, சுயளும் தன் சிரத்தை கரங்களால் பற்றியவண்ணம், திடீரென்று தன் சித்தஸ்வாதீனத்தை இழந்தவன்போல், மிரண்ட பார்வையுடன் சுமார் 5 நிமிஷநேரம் தரையை உற்று நோக்கியவண்ணமிருந்தான். அவனுடைய பீதியையும் கவலையையும் கண்ட பக்கிரிசாமி,

“ஐயரே! எதற்காக இப்படி பயப்படுகிறீர்? நம்மைப் போலீஸார் கண்டுபிடிக்கவே முடியாது. நீர் இவ்விதம் பயப்படுவது சந்தேகத்திற்கிடம்.” என்று கூறவே, ராமு, தடுமாற்றத்துடன்,

“நாம் போலீஸாரை ஏமாற்ற முடியாது. அவர்கள் எப்படியாவது சீக்கிரம் நம்மைக் கண்டுபிடித்துவிடுவார்கள். இன்னும் அவர்கள் நம்மை சந்தேகிக்க நல்ல காரணமும் இருக்கிறது. சிங்காரம் செட்டியாருடைய வீட்டின் வெளி வாசற் கதவு உட்பக்கம் தாளிடப்பட்டிருக்கும். ஆகவே வந்து அவனைக் கொலை செய்தவர்கள் உன் வீட்டின் மாடி வழியாகத்தான் வந்திருக்கவேண்டுமென்று தீர்

மானிப்பார்கள். இன்னும் நம்மையின்றி வேறு சிலரே அவ் வீட்டிற்குள் நுழைந்ததாக வைத்துக்கொண்டாலும் அவர்கள் அவளைக் கொல்லக் காரணமென்ன? அப்படியே காரணம் இருந்தாலும், அவர்கள் அவளைக் கொல்ல இவ்வித்ம் ஒரு மயக்க மருந்தை உபயோகித்தார்களென்பது நம்பத்தகுந்ததல்ல.'' என்றான். உடனே பக்கிரிசாமி,

''பேஷ்! நீர் சொல்வது வாஸ்தவமே. ஆனால் நீர் பயப்படவே வேண்டாம். ஐயரே! தெய்வம் நம்முடைய பக்கத்தில் இருக்கிறது. ஸ்வாமி! நான் என் வீட்டு மாடிக்கும் அவ் வீட்டு மாடிக்கும் இடையிலிருக்கும் சுவரின்மீது ஏறும்பொழுது, செட்டியார் வீட்டு சமையற்காரக் கிழவி (மரகதம்) ராஜலெக்ஷ்மியின் படுக்கையறைக்குள் நுழைவதைக் கண்டேன். நான் உடனே வியப்புற்று, மெள்ளக் கீழே குதித்து, அவ்வறையின் சமீபம் சென்று பார்த்தபொழுது, அக் கிழவி, அவ்வறையிலிருந்த ஒரு பெட்டியைத் திறந்து, அதிலிருந்து ஒரு நகைப் பெட்டியை எடுத்துக்கொண்டிருந்தாள். நான் உடனே அவ்வறைக்குள் பாய்ந்து அவளைக் கையும் களவுமாய்ப் பிடித்துக்கொண்டு, திரும்பி, கட்டிலில் கிடந்த ராஜலெக்ஷ்மியைக் கவனித்ததும் திடுக்கிட்டேன். ஏனெனில், அச்சமயமிருந்த அவளுடைய முக விகாரத்திலிருந்தே அவள் ஏற்கனவே இறந்துவிட்டாளென்று தோன்றியது. நான் அக் கிழவியை இழுத்துக்கொண்டே சென்று, அவளுடைய (ராஜலெக்ஷ்மியின்) சரீரத்தைத் தொட்டுப் பார்த்து, அவள் இறந்துவிட்டாளென்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொண்டதும், அவள் அப்படி இறந்ததற்குக் காரணம் நாம் கொடுத்த மயக்க மருந்தேயென்பது எனக்கு நன்றாய்த் தெரிந்தபோதிலும், அப் பழியை தாராளமாய் அக் கிழவியின் (மரகதத்தின்) தலையில் சுமற்றலாமென்று நினைத்து, அக் கிழவியை நான் பயமுறுத்தவே, அவள், நடுநடுங்கி, தான் அவளைக் கொல்லவில்லையென்றும், தான் அந் நகைகளைக் களவாடும்பொருட்டு மாடிக்கு வந்ததாகவும், எப்படியாவது தன்னைக் காப்பாற்றுமாறும் கெஞ்சினாள். நான் அவளுடைய கையிலிருந்த

188788



அந் நகைப் பெட்டியைப் பிடுங்கிக்கொண்டு, அவள் உடனே ஓடிப்போய்விட வேண்டுமென்றும், அவளை நான் மறுபடியும் எப்பொழுதாவது இவ்வூரில் பார்த்தால், உடனே போலீஸாரிடம் ஒப்புவித்துவிடுவேனென்றும் சொல்லவே, அக் கிழவி, பிழைத்தது புனர் ஜன்மமென்று நினைத்தவள்போல், கொல்லைப்பக்கமாய் ஓடிவிட்டாள். இப்பொழுது அவ் வீட்டின் கொல்லைக் கதவு திறந்துகிடக்கிறது. என் ஐயமே! நாளை தினம் போலீஸார் வந்து ராஜலெக்ஷ்மி கொல்லப்பட்டிருப்பதையும், அவளுடைய நகைகள் திருட்டுப்போயிருப்பதையும், கீழே கொல்லைக் கதவு திறந்திருப்பதையும், எல்லாம்போக, அக் கிழவி ஓடிவிட்டதையும் அறிந்தும் அவர்கள் நம்மை சந்தேகிப்பார்களோ?" என்று வினவினான். இதைக் கேட்டதும், ராமு, மேலும் திகைப்புற்று, தன் செவிகளையே நம்பாதவன்போல் காணப்பட்டான். பிறகு,

"ஆமாம்; இப்பொழுது அந்த நகைகள் எங்கே?" என்று வினவ, பக்கிரிசாமி,

"இதோ பார்." என்று கூறியவண்ணம் தன் மடியிலிருந்து ஒருசிறிய மூட்டையை எடுத்துக் கீழே வைத்தான். அதைப் பார்த்ததும் ராமு, பெருமூச்செறிந்துவிட்டு,

"என்ன அநியாயம்? அவளைக் கொலையும் செய்துவிட்டு, அவளுடைய நகைகளையுமா எடுத்துக்கொள்வது?" என்று வினவ, பக்கிரிசாமி,

"ஐயமே! நாம் வேண்டுமென்று அவளைக் கொல்லவில்லை. அவள் இவ்விதம் சாகவேண்டுமென்று பிரும்மன் எழுதியிருக்கிறான். நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் நாம் தப்பித்துக்கொள்ளும் வழியைத்தானே பார்க்கவேண்டும்." என்றான். ராமு,

"சரி; இந்த நகைகளை நாம் என்ன செய்வது?" என்று கேட்க, பக்கிரிசாமி,

1932 25வது பதிப்பு. 1932

# ஸ்ரீவித்யா

ஜெம், ஜென்ட்ஸ், பாக்கெட்,
பிஸினஸ், பாப்புலர் & அபிஷியல்

## டைரிகள்

இந்த டைரிகள் உயர்ந்த வெண்மையான பேபரில் பிரிண்டு செய்து, மிகவும் நேர்த்தியான காலிகோவில் பைண்டு செய்யப்பட்டிருக்கின்றன. ஒருதரம் உபயோகித்தால் நன்கு விளங்கும்.

தேன் இந்தியா முழுவதும் எல்லோராலும்
நன்கு மதிக்கப்பெற்றது.

பப்ளிஷர்ஸ் :—ஸ்ரீவித்யா பிரஸ்,
கும்பகோணம், (தேன் இந்தியா).

# பிரஸவ காலத்தில் செய்யவேண்டிய முதல் உதவி.

நூலாசிரியர்—டாக்டர் யூ. ராம ராவ்.

நமது இந்துதேசத்தில் தாய்களின் மரண விகிதமும் சிசுக்களின் மரண விகிதமும் தற்போது அதிகமாகவிருக்கிறது. ஒரு வயதுக்குட்பட்ட சிசுக்களில் 1000க்கு 260 பேர்கள் வருஷவாரி மாண்டுபோகிறார்கள். தாய்மார்கள் கர்ப்பிணிகளாக இருக்கும்போது ஆரோக்கிய விதிகளைக் கவனியாமல் தேகத்தை பலஹீனப்படுத்திக்கொள்வதும், பிரஸவகாலத்தில் டாக்டர், தேர்ச்சிபெற்ற மருத்துவ ஸ்திரீ இவர்கள் உதவி இல்லாமல், புராதன பழக்கத்தைக் கைப்பிடித்து ஒன்றும் தெரியாத மருத்துவகுல ஸ்திரீகளைக்கொண்டு மருத்துவம் செய்துகொள்வதும், சிசு பிறந்த பிறகு அதற்கு வேண்டிய போஷிப்பைச் சரிவர செய்யாமலிருப்பதுமே இதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. ஆனதுபற்றி இந்திய ஸ்திரீகளுக்கு பிரஸவத்தைக் குறித்து அற்ப ஞானமாகிலும் இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. முதல் உதவிபுரியப் போதுமான அறிவு இல்லாமையால் அநேக கெடுதிகள் சம்பவிக்கின்றன. பிரஸவ வேதனைப்படும்போது டாக்டர் அல்லது மருத்துவ ஸ்திரீ வரும்வரையில் இன்னது செய்யவேண்டுமென்பதை மட்டும் இச்சிறு நூல் கற்பிக்கிறது. இதில் பதினொன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. கர்ப்பச் சின்னங்கள், கர்ப்பகாலத்தில் நேரிடும் விபத்துக்கள், சுகப்பிரசவம், கஷ்டப் பிரசவம், பிரசவத்தில் பரிசுத்தம், பிரசவகாலத்தில் நேரிடக்கூடிய சிக்கான வியாதிகள், குழந்தையின் பாதுகாப்பு, சிசுக்களின் போஷிப்பு இவை முதலியன யாவரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள். இப்புத்தகம் எளிய தமிழ் நடையில் பரிபாஷைக் கலப்பின்றி எழுதப்பட்டிருக்கிறது.

விலை அணா **6.**

ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்பவேண்டுமானால் ஆறு காப்பிக்கு குறையாமல் ஆர்டர் செய்யவேண்டும். வேண்டுவோர் சென்னை தம்புசெட்டித்தெரு 323 நெ. **ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ்** அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். **விலாசம்—ஆரோக்கிய தீபிகை மானேஜர், தபாற்பெட்டி 166, சென்னை** என்று எழுதவும்.

Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.